
விஜயாலய சோழன்

குவாவன் சாத்தன்
முத்தரையனின் மகன்



ஸ்வஸ்தி ஸ்ரீ சாத்தம் பூதி
இளங்கோ வதியரையன் எடுப்பித்த
விஜயாலய சோழீஸ்வரம்

ஜெகன் சுந்தரராஜன்

இரண்டாம் பதிப்பு

விஜயாலய சோழன்

குவாவன் சாத்தன் முத்தரையனின் மகன்



ஸ்வஸ்தி ஶ்ரீ சாத்தம் பூதி
இளங்கோ வதியரையன் எடுப்பித்த
விஜயாலய சோழீஸ்வரம்

ஜெகன் சுந்தரராஜன்

இரண்டாம் பதிப்பு

Jegan Sundararajan

விஜயாலய சோழன்

குவாவன் சாத்தன் முத்தரையனின் மகன்

First published by Valanadu publications 2021

ASIN : B08KYK69VN

Second edition

This book was professionally typeset on Reedsy
Find out more at reedsy.com

Contents

Preface

முகவுரை

இடைக்கால சோழர் வரலாற்றை இருண்ட காலம் என்று வரலாற்று ஆசிரியர்கள் இதுவரை கூறி வருகிறார்கள். கரிகாற் சோழனின் சந்ததியினர் தமிழகத்தின் பண்டைய வடஎல்லையான வேங்கட மலை தொடரின் வடக்கு அடிவாரத்தில் ஆட்சி புரிந்துள்ளனர். அவர்கள் வெளியிட்ட இரண்டு செப்பேடுகள் மற்றும் பன்னிரண்டு கல்வெட்டுகளை ஆராய்ந்து இந்த நூலில் விரிவாக எழுதியுள்ளேன். அந்த ஆவணங்களை அடிப்படை ஆதாரமாக கொண்டு விஜயாலய சோழன் என்ற நூலை இயற்றி உள்ளேன்.

தஞ்சை சோழர்களின் முன்னோர்கள் பற்றி இருந்த ஐயப்பாடுகளுக்கு விடையாக விஜயாலய சோழன் நூல் அமையும் என்று கருதுகிறேன.

ஜெகன் சுந்தரராஜன்
இணை பேராசிரியர்
சன்ஸ்கிருதி பல்கலைகழகம்,
உத்தர பிரதேசம் -208


1

ரேனாட்டு சோழர்கள்

வடபெண்ணை தேசத்தை ஆண்ட சோழர்கள்:-

வளமான வடபெண்ணை ஆறு பாயும் தேசத்தை ஆண்ட நந்திவர்ம சோழனுக்கு மூன்று மகன்கள் இருந்துள்ளதாக புண்ணிய குமார முத்துராஜா வெளியிட்ட மலேபாடு செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. அந்த மூவரில் அனைவருக்கும் மூத்த இளவரசனான சிம்மவிஷ்ணுவைப் பற்றி அங்கு எந்த ஆவணமும் கிடைக்க பெறவில்லை. நந்தி வர்மனின் இரண்டாவது மகன் சுந்தரநந்தாவும், மூன்றாவது மகன் தனஞ்சய முத்துராஜாவும் ஆவர்.

நந்திவர்ம சோழனின் இவ்விரு வாரிசுகளை பற்றிய கல்வெட்டுகள் மற்றும் செப்புப் பட்டய சாசனங்கள் ரேநாட்டில் காணப்படுகிறது.



19ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் கர்னல். காலின் மெக்கன்சி என்பவர் தனது உதவியாளர்கள் துணையுடன் பல்வேறு ஆவணங்களின் கையெழுத்து பிரதிகளை சேகரித்தார். அந்த தொகுப்புகள் பிற்காலத்தில் மெக்கன்சி கையெழுத்துப் பிரதிகள் (Mackenzie manuscripts collection) என்றழைக்கப்பட்டன.

அக்காலகட்டத்தில் கண்ணால் பார்த்து (eye copies) கல்வெட்டில் உள்ள தகவல்கள் சேகரிக்கப்பட்டன.

கையெழுத்துப் பிரதிகளில் கூறப்பட்டுள்ள கல்வெட்டுத் தகவல்கள் சோழர்களைப் பற்றி அறிந்து கொள்ள பெருமளவு உதவுகிறது.

எரிகல்-முத்துராஜா புண்ணிய குமாரன் வெளியிட்ட மலேபாடு செப்பேடு:-

கடப்பா மாவட்டத்தில் துணை மாவட்ட ஆட்சியராக பணிபுரிந்த திரு.ராமையா என்பவர் அப்பகுதியில் காணப்பட்ட செப்பேடு மற்றும் கல்வெட்டுகளைப் பற்றிய தகவல்களை மெட்ராஸ் தொல்லியல் துறையின் கவனத்திற்கு கொண்டு சென்றுள்ளார். தகவல் கூறிய துணை மாவட்ட ஆட்சியரின் உதவியுடன் மெட்ராஸ் தொல்லியல் துறை அதிகாரி திரு.ராவ் பகதூர் வெங்கையா என்பவர் செப்பு பட்டயத்தையும் கல்வெட்டுகளையும் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளார்.

சாலியர் வகுப்பைச் சார்ந்த திரு. வரதப்பன் என்பவர் மலேபாடு என்னும் ஊரில் மடம் கட்டுவதற்கு அஸ்திவாரம் தோண்டியபொழுது இப்பட்டயம் கிடைத்துள்ளது. பின்னர் எம்பெருமான் என்று அழைக்கப்பட்ட ஆலயத்தில் பத்திரப்படுத்தப்பட்டு துணை மாவட்ட ஆட்சியரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது. அந்தப் பட்டயம் மாலேபாடு செப்பேடு என்று ஆவணங்களில் குறிக்கப்படுகிறது. அந்த செப்பேட்டில் முத்திரையுடன் கூடிய ஒரு வளையத்தில் 3 செப்புத் தகடுகள் கோர்த்து இருந்துள்ளன. முத்திரையில் இடது முன்காலை

உயர்த்தியவாறும் வாலினை முறுக்கியபடியும் ஒரு உருவம் இலச்சினையாக பொறிக்கப்பட்டிருந்தது.



மாலேபாடு செப்புபட்டய முத்திரை

நீண்டு தொங்கும் பிடரி மயிர் மற்றும் முதுகுக்கு மேலே காணப்படும் முறுக்கிய வால் ஆகியவற்றை கருத்தில் கொண்டு அந்தச் செப்பேட்டின் முத்திரையில் உள்ளது ஒரு சிங்கத்தின் உருவம் என உறுதி செய்யப்பட்டது.

மன்னர்கள் வெளியிடும் செப்புப் பட்டயங்களில் காணப்படும் இலச்சினை முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும். தஞ்சையை தலைநகராக கொண்ட சோழர்கள் வேங்கைபுலியை இலச்சினையாக கொண்டிருந்ததால், துணை மாவட்ட ஆட்சியர் அந்த உருவத்தை புலி என முதலில் தெரிவித்துள்ளார். ஆனால், மலேபாடு செப்பேட்டை வெளியிட்ட அரச குடும்பத்தை சார்ந்த மற்ற மன்னர்களின் கல்வெட்டுகளில் சிங்கம் போன்ற உருவமானது சின்னமாக பொறிக்கப்பட்டுள்ளது.

கரிகால் சோழனின் வம்சத்தில் தோன்றிய சந்திராதித்யா என்ற மன்னனும் இலச்சினையாக சிங்கத்தை கொண்டிருந்தான். அதன்மூலம் மேற்காணும் மலேபாடு செப்புப் பட்டயத்தில் காணப்படுவது சிங்கத்தின் உருவம்தான் என இறுதி செய்யப்பட்டது.

எரிகல் - முத்துராஜா புண்ணிய குமாரன் வெளியிட்ட மலேபாடு செப்பேட்டில் காணப்படும் சிங்கமுத்திரையை போன்ற உருவம் பதித்த நாணயமானது வேங்கிபகுதியை ஆட்சி செய்த பல்லவ மன்னரால் வெளியிடப்பட்டிருந்ததை சர்.வால்டர் என்பவர் தனது தென்னிந்திய நாணயங்கள் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

ஏழாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சார்ந்த லலிதாங்குரன் என்னும் முதலாம் மகேந்திர வர்ம

பல்லவனின் காலத்தில், சியமங்கலம் எனும் ஊரில் தோற்றுவிக்கப்பட்ட குடைவரைக் கோயிலில் ஒன்றையொன்று நோக்கியவாறு இரண்டு சிங்கங்களின் சிற்பங்கள் உள்ளன. பல்லவ மன்னன் விஷ்ணுகோபன் வெளியிட்ட செப்பு பட்டயத்தில் புண்ணிய குமாரனின் மலேபாடு செப்புப் பட்டய இலச்சினை போல் சிங்க உருவம் பொறிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது மலேபாடு செப்பேட்டில் கூறப்பட்டுள்ள தகவல்களை காண்போம். சிவனின் புகழைப் போற்றி தொடங்கும் இச்செப்பேடு நந்திவர்ம சோழனை பற்றி தெரிவிப்பதோடு அம்மன்னன் மந்தார மலை மேல் அமைந்துள்ள மந்தார மரத்திற்கு ஒப்பான கரிகால் சோழனின் வம்சத்தில் தோன்றியவன் என்று புகழ்கிறது. கரிகால் சோழன் மூவேந்தர்களின் மதிப்பை பெற்றவன் என்பதோடு காவிரி ஆற்றின் இருபக்கமும் நீர் கடந்து செல்லா வண்ணம் கரையை உயர்த்தியவன் என்றும் மலேபாடு செப்பேட்டில் புகழப்பட்டுள்ளார்.

நந்திவர்ம சோழனுக்கு சிம்மவிஷ்ணு, சுந்தரநந்தா மற்றும் தனஜெய வர்மன் என மூன்று மகன்கள் இருந்தனர் என பட்டயம் கூறுகிறது. அவர்களில் இளையவன் தனஜெய வர்மன்ஆவார். அவருடைய ஆட்சிக்கு அடுத்து மகேந்திர விக்கிரம சோழ மகாராஜா அரியணை ஏறுகிறார். மகேந்திரன் இறையாண்மையுடன் ஆட்சி செய்யும் வாரிசு என செப்பேட்டில் கூறப்பட்டுள்ளது. *சேர சோழ பாண்டிய அதிபதி* எனவும் தேவலோக மகேந்திரனுக்கு நிகரான மகத்துவம்

வாய்ந்தவன் எனவும் மகேந்திர விக்கிரமன் கூறப்பட்டுள்ளார்.


நவராமா மற்றும் *முதிதசிலாக்ஷிரன்* போன்ற பெயர்களுக்கும் உரியவர் என மலேபாடு பட்டயத்தை வெளியிட்ட புண்ணிய குமாரன் தனது தந்தையான மகேந்திர விக்கிரமனை பற்றி தெரிவிக்கிறார். சோழ மகாராஜாவான மகேந்திர வர்மனின் மூத்த மகன் குணமுதிதன் ஆவார். இளைய மகன் புண்ணிய குமாரன் ஆவார். புண்ணிய குமார முத்துராஜா தனது ஆட்சிக்கு உட்பட்ட பகுதியோடு கூடுதலாக ஹிரண்ய ராஷ்டிரத்தையும் சேர்த்து ஆட்சி செய்துள்ளார்.

மேலும், *போர்முகராமன்*, *புருஷஷார்துலன்*, *மார்டவசிட்டன்* மற்றும் *மதனவிலாசன்* போன்ற அனேக பெயர்களில் அறியப்பட்டுள்ள புண்ணிய குமாரன் வெளியிட்ட செப்பேட்டின் மூலம், நந்திவர்ம சோழன் முதல் அவர்வரை ஆட்சிசெய்த சோழ மன்னர்களின் மரபு பட்டியல் கிடைத்துள்ளது. மேலும், இப்பட்டயமானது கேசவசர்மன் என்பவருக்கு நில வரியிலிருந்து விலக்கு அளித்த செய்தியை கூறுகிறது. அந்த நிலமானது வடபெண்ணை ஆற்றின் கிளை நதியான சுப்ரயோகா ஓடையின் அருகில் இருந்துள்ளது. அப்பகுதி ஹிரண்யராஷ்டிரத்தின் கீழ் வருகிறது.

செப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நந்தி வர்ம சோழனின் மூன்று புத்திரர்களில் முதல் இருவரின் பெயர்கள் பல்லவ மன்னர்களின் பெயர்களை ஒத்துள்ளன. மேலும், தனஞ்சய வர்மனின் மகனுக்கு சூட்டப்பட்டுள்ள பெயர்களான *நவராமா* மற்றும்

முதிதசிலாக்ஷரன் போன்ற பெயர்கள் பல்லவ மன்னர் முதலாம் மகேந்திர வர்மனுடன் தொடர்புடையதாக உள்ளன. புண்ணிய குமாரனின் *மதனவிலாசா* என்ற பெயரானது பல்லவனின் *மத்தவிலாசா* என்பதனோடு ஒத்துப்போகிறது.

பல்லவர்களோடு கைக்கோர்த்துக் கொண்டு அல்லது கீழ் கட்டுப்பட்டு ரேநாட்டு சோழர்கள் ஆட்சி செய்துள்ளதை இப்பெயர் ஒற்றுமையின் மூலம் அறிகிறோம்.


No 35.] MALEPADU PLATES OF PUNYAKUMARA. 345

3 r-ācha[la*]-Mandāru(ra)-pādapasya Kavēra-tanayā-[vē]l-ō[l*]laṁghana-praśamana-pramukh-ā-
4 dy-anēk-ātiśaya-kāriṇah trairājya-sthitim-ātmasāt-kṛitavatah Ka-
5 rikālasy-ānvayō Kaśyapa-gōtrah Nandivarmmā nāma nṛipatir-abhavat [|*]
6 Tasya traya[s*]-[sū]navah [Siṁha]vishṇu[s*]-Sundarana[ndō] Dhanaṁjayavarmm-ēti [|*] Tē [pu]-
7 [tr-ā]nu[pu]tr-y-ānubhūta-rājya-śriyah [|*] Kaniya[sō] Dhanaṁjayavarmma-

Second Plate, First Side

8 nah putrah pariprāpta-Chōḷa-Mahārāja-śabdah [Śabda-śāstr-ā]-
9 dy-anēka-pāragah Pāndya-Chōla-Kēralānām-adhipatih [|*] Tasya
10 śri-Muditaśilākshara-Navarām-ādy-anēka-nāmadhēya-
11 Mahēndra-sama-vikramasya Mahēndravikramavarmmaṇah putrah Gu-
12 ṇamuditō nāma nṛipatir-a[bha]va[t] [|*] Tasya priyō bhrātā Pō-
13 rmukharāma-Purushaśārdūla-Mārdavachitta-Madanavilās-ādy-anē-
14 ka-nāmadhēyah śrimā[n-Pu]ṇyakumārō nāma nṛipatir-a-

Second Plate, Second Side

15 [bha]va[t] || Asau Hiraṇya-rāshṭra-[sa]hitā[n-sva]-rāshṭra-nivāsinas-sa-
16 rvvān-ittham-ājñāpayati [|*] Viditam-astu vō [=]smābhih pravarddha[mā]-
17 na-vijaya-rājya-saṁvatsarē pañchamē varttamānē Kārtti-
18 ka-[pau]rṇamāsyāṁ-tithau Kottiku]darāja-vijñāpanayā
19 Ātrēya-[gō]trāya [Chi]ruvana[ha]a]-Kēśavaśarmmaṇē Hira-
20 ṇya-rāshṭrē Supra[yō]ga-nadyā dakshiṇa-tīrē Birapāṛu-nāma-
21 grāmah [ta]sya grāmasya dakshiṇa-pūrvvasyāṁ diśi rāja-

Third Plate

22 mānēna dvā-pañchaviṁśati-nivartanē[1] kshētrē sarvva-
23 bādhā-kara-parihāran-dattō[2] || Abbhir-ddattam [3]tribhir-bhuktam
24 sadbhiś-cha paripālitam [|*] ētāni na nivarttantē pūrvva-
25 rāja-kṛitāni cha || Sva-dattāṁ para-dattāṁ vā yō
26 harēta vasundharāṁ [|*] shashṭi-varsha-sahasrāṇi vi-
27 shṭhāyāṁ [jāyatē] krimih || Svasti gō-brāhmaṇēbhyah |||

POSTSCRIPT

TEXT.[4]

First Face

1 ◎ Svasti śri-Chōḷa-Ma-
2 h[ā]rājādhirāja pa-
3 ramēśvara Vikramādi-
4 tya Śaktikomara Vi-
5 kramādit[y*]ula koduk[u-
6 l] Kāsyapa-g[ō]tru-
7 [ṇḍu] Śatyadituṇḍu Śiddhi-
8 [voy]u Rēnāndu-ēḷu[vē-

மாலேபாடு செப்பேடு (Text in English)

மாலேபாடு பட்டயத்தின் மூலம் நந்தி வர்ம சோழனின் வாரிசுகள் சுபிட்சமாக நாடாண்ட தகவல் கிடைக்கிறது.

“தேபுத்ரானு புத்ரியானு பூத ராஜ்ய ஶ்ரீய”

என்ற செப்பேட்டின் வடமொழி வாக்கியத்தின் மூலம் சிம்மவிஷ்ணு, சுந்தரநந்தா மற்றும் தனஞ்சய வர்மன் ஆகிய மூவரும் வளமுடன் புத்திர பாக்கியம் பெற்று ஆட்சி செய்தனர் என்பதை அறிய முடிகிறது. ஆனால், சிம்மவிஷ்ணுவைப் பற்றி அவ்விடம் கல்வெட்டுகள் மற்றும் செப்பு பட்டயம் எதுவும் கிடைக்கப் பெறாமையால் களப்பிரருக்கு பின்னர் காவிரி நாட்டை ஆட்சி செய்யும் பொருட்டு உறையூருக்கு அவர் வந்து இருக்கலாம் என வரலாற்று ஆசிரியர்கள் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

மாலேபாடு செப்பு பட்டயத்தின் மூலம் பல்வேறு தகவல்கள் கிடைத்துள்ளன. புண்ணிய குமார முத்துராஜா என்பவர் ரேனாடு மற்றும் ஹிரண்யராஸ்டிரத்தை ஆட்சி புரிந்தபொழுது **எரிகல்**, **சிற்பள்ளி** போன்ற ஊர்கள் முக்கிய நகரங்களாக இருந்துள்ளன.

எரிகல் - முத்துராஜா தனஞ்சய வர்மன் :- (கி.பி. 575 -600)

தென்னிந்திய வரலாற்றிலேயே மிக முக்கியமான அரசன் ஆவார். தனஞ்சயன் மற்றும் அவரின் வாரிசுகள் ரேநாடு, ஹிரண்ய ராஷ்டிரம் மற்றும் சித்தி1000 (siddhi 1000) ஆகிய வடபெண்ணை ஆறு வளம் சேர்க்கும் பகுதிகளை ஆட்சி செய்துள்ளனர்.

தனஞ்செய வர்மன் தனது பெயருடன் “எரிகல் - முத்துராஜா” என்ற அடைமொழியை சூடிக்கொள்வதோடு அவரின் சந்ததியினரான புண்ணிய குமாரன்,

சத்யாதித்யா போன்றவர்களும் அதே அடைமொழியுடன் ரேனாட்டில் அழைக்கப்பட்டுள்ளனர்.

சிற்பள்ளி என்ற நகரம் ரேநாட்டு பகுதியிலும், மாலேபாடு என்ற நகரம் ஹிரண்ய ராஷ்டிரம் என்ற பகுதியிலும் அமைந்திருந்தன.

எரிகல் - முத்துராஜா தனஞ்சய வர்மனின் கலமல்லா கல்வெட்டு:-

கமலாபுரம் தாலுக்காவின் கலமல்லா என்ற ஊரில் சென்ன கேசவ பெருமாள் ஆலயம் அமைந்துள்ளது. ஆலயத்தில் உள்ள ஒரு உடைந்த தூணின் இரு பக்கங்களில் இக்கல்வெட்டானது செதுக்கப்பட்டுள்ளது. கல்வெட்டின் பல வரிகள் சிதிலமடைந்து உள்ளன. ஆறாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தை சார்ந்த இக்கல்வெட்டை வெளியிடும்பொழுது நாட்டின் அரசனாக எரிகல்-முத்துராஜா இருந்துள்ளார். இம்மன்னர் மலேபாடு பட்டயத்தில் கூறப்பட்டுள்ள சோழ மகாராஜாவான மகேந்திர விக்கிரமனின் தந்தை ஆவார். இக்கல்வெட்டு சிறும்பூர் என்னும் ஊரை சேர்ந்த ரேவணகாலு என்பவருடன் தொடர்புடைய தானம் பற்றிய செய்தியை எடுத்துரைக்கிறது.

1 ....
2 -kalmu[tu]rā-
3 ju Dhanaṁja-
4 yugu Rēnā-
5 ṇḍu ēḷan
6 Chirumbūri
7 Rēvaṇakālu [paṁ-]
8 pu Cheṁūrukāju
9 aḻikaḷā[ū]ri-
10 ṇḍa vāru[ūri]. .
11—14 four lines damaged
15 .... pañcha[ma*-]
16 hāpātakasa-
17 [ku]

எரிகல் - முத்துராஜா தனஞ்சய வர்மனின் கலமல்லா கல்வெட்டு

எரிகல்–முத்துராஜா என்ற பட்டத்துடன் தனஞ்ஜெய வர்மன் அழைக்கப்பட்டுள்ளார். சோழமகாராஜா என்ற

பட்டத்துடன் உள்ள வேறு மன்னர்கள் வெளியிட்ட கல்வெட்டுகளில் எரிகல் - துகராஜா என யுவராஜன் குறிப்பிடப்பட்டுள்ளார். இவற்றில் **எரிகல்** என்பது ஒரு ஊரின் பெயராகவும் **துகராஜா** மற்றும் **முத்துராஜா** போன்றவை அதிகாரங்களை குறிக்கும் ஸ்தானங்கள் என வரலாற்று அறிஞர்கள் விளக்கம் அளித்துள்ளனர்.

கலமல்லா கல்வெட்டில் குறிப்பிடப்படும் தனஞ்சய வர்மன் என்பவர் முத்துராஜா என்ற **ஸ்தானத்தில்** இருந்துள்ளார். தனஞ்செயனின் பேரனான புண்ணியகுமாரனும் முத்துராஜா என்ற ஸ்தானத்தில் இருந்துள்ளார் என்பதை மற்ற கல்வெட்டுகள் மூலம் அறியமுடிகிறது.

முத்துராஜா என்ற பட்டத்துடன் காணப்படும் மன்னரின் பெயரானது **ஒருமை விகுதியுடன்** எழுதப்பட்டுள்ளன. மேலும், சில கல்வெட்டுகளில் இரண்டாவதாக முத்துராஜா ஸ்தானத்தில் உள்ள இளவரசனின் (அல்லது மன்னரின் பெயர்) எழுதப்பட்டுள்ளது. உதாரணத்துக்கு, பல்லவ தந்திவர்மன் பெயர் எழுதப்பட்டு காடுவெட்டி முத்தரையன் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. அதேபோல், மலையடிப்பட்டி குடைவரை கோயிலில் தந்தி வர்ம பல்லவனின் பெயருக்கு அடுத்ததாக குவாவன் சாத்தன் முத்தரையர் பெயர் எழுதப்பட்டுள்ளது. இதன்மூலம், முத்துராஜா ஸ்தானத்தில் நாட்டின் ஒரு குறிப்பிட்ட பகுதியை ஆளும்பொழுது சில காலகட்டத்தில் தன்னிச்சையாகவும் சில சூழல்களில் கட்டுப்பட்ட அரசர்களாகவும் இருந்துள்ளனர் என்பதை உணரமுடிகிறது. எரிகல்-

முத்துராஜா தனஞ்செய வர்மன் தன்னிச்சையாக ஆட்சி செய்ததை கல்வெட்டின் மூலம் அறியமுடிகிறது.

முத்துராஜா அல்லது முத்தரையன் என்ற பட்டமானது (Royal rank) தனது தந்தைக்குப்பின் அரியணை ஏறபோகும் யுவராஜனின் இளைய சகோதரனுக்கு உரிய ஸ்தானம் என்பது தெளிவாகிறது.

இரண்டாம் விக்கிரமாதித்ய
சோழமகாராஜா (கி.பி. 700)

உத்தமாதித்ய
சோழ மகாராஜா

எரிகல் - முத்துராஜா
சத்யாதித்யா

இரண்டாம்
மகேந்திரவர்மன்
(கி.பி. 725-750)

இளஞ்சோழா

கபிபோலா -
முத்துராஜா

மேலும், முத்துராஜா பட்டமானது யுவராஜனை தவிர்த்து ஏனைய இளவரசர்களின் மூத்தவனுக்கு வழங்கப்பட்டது ஆகும். பெரும்பிடுகு முத்தரையன் மற்றும் விடேல்விடுகு முத்தரையன் போன்ற கூட்டுபெயர்களில் பெரும்பிடுகு மற்றும் விடேல்விடுகு போன்ற அடைமொழிகள் அம்மன்னர் எந்த பேரரசருக்கு கட்டுப்பட்டவரோ அவரின் பட்டமாகும். மேலும், முத்தரையன் என்பது அவர்களின் ஸ்தானமாகும். கல்வெட்டில் குறிப்பிடப்படும் தனஞ்சய வர்மன் அவருடைய தந்தைக்கு மூன்றாவது மகனாக இருந்தாலும் நாட்டின் ஒரு பகுதியை தன்னிச்சையாக ஆட்சிசெய்யும் வாய்ப்பினை பெற்றிருந்தார்.

அதே நேரத்தில் நந்திவர்மனின் மூத்தமகனான சிம்மவிஷ்ணுவும் புத்திரபாக்கியம் பெற்று நாடாண்டது புண்ணியகுமாரனின் செப்பேட்டின் மூலம் அறிகிறோம். குல வழக்கப்படி இரண்டாவது மகனுக்கு கிடைக்க வேண்டிய முத்துராஜா என்ற ஸ்தானமானது மூன்றாவது மகனுக்கு வழங்கப்பட்டு இருப்பதன் மூலம் சிம்மவிஷ்ணு வேறு தேசத்திற்கு ஆட்சிசெய்ய சென்று இருப்பதை உணரமுடிகிறது.

கி.பி.6ம் நூற்றாண்டின் இறுதிகாலமாக இருப்பதால் சிம்மவிஷ்ணு களப்பிரர்களை பல்லவர்களுடன் இணைந்தோ அல்லது தனித்தோ போரில் வென்று உறையூரை கைப்பற்றி இருக்கலாம். அதன் பின்னர் தனது அரியணையை சுந்தரநந்தாவிடம் ஒப்படைத்துவிட்டு மூதாதையர் ஆண்ட காவிரிதேசத்தை ஆட்சி செய்ய வந்திருக்கலாம் என்ற கருத்துக்களும் முன் வைக்கப்பட்டுள்ளன.

ஏனெனில், அதற்கு சற்று காலம் முன்னர் பாண்டியன் கடுங்கோன் (கி.பி. 525) களப்பிரர்களை வென்று மதுரையை மீட்டுள்ளார். அதனை தொடர்ந்து பாண்டியர்கள் உறையூரையும் கைப்பற்றும் முன் நந்திவர்ம சோழனின் படைகள் தங்கள் பூர்வீக சோழநாட்டை களப்பிரரிடமிருந்து மீட்டு ஆட்சி செய்து இருக்கலாம் என **முத்தரையர் சோழர் வரலாறு** என்ற நூலில் விரிவாக எழுதப்பட்டுள்ளது. மேலும், அந்நூலில் **சிம்ம**விஷ்ணு என்பவர்தான் கோ-**சிங்க**னார் அல்லது கோச்செங்கணான் என்று விளக்கம் கூறப்பட்டுள்ளது. கோச்செங்கணான் மற்றும் அவருடைய மகனான நல்லடிகோன் தன்னிச்சையாக ஆட்சி செய்து பல்லவனை புறக்கணித்ததால் சிம்மவிஷ்ணு (கி.பி. 575 - 600) என்ற பல்லவனால் வீழ்த்தப்பட்டனர் என்று **சி.சுந்தரராஜன்** அவர்கள் அந்நூலில் கூறியுள்ளார்.

ரேநாட்டில் கிடைக்கப்பெறும் சாசனங்களில் மன்னரின் பெயருடன் மூன்று ஸ்தானங்கள் குறிப்பிடப்பட்டு உள்ளன.

அவையாவன

a) சோழமகாராஜா அல்லது மகாராஜாஅதிராஜா:-

வளமான வடபெண்ணை ஆறுபாயும் தேசத்தை ஆட்சி செய்த சோழர்கள் தங்கள் நாட்டை மூன்று பகுதிகளாக பிரித்து உள்ளனர். இவர்களில் மகாராஜாஅதிராஜா என்பவர் ஒரு பகுதியில் நேரடியாக ஆட்சி செலுத்திக்கொண்டே நாட்டின் மற்ற இரு பகுதிகளுக்கு 2 இளவரசர்களை நியமிப்பார். அவ்விரு இளவரசர்களும்

வைசிராய் போல ஆட்சி செய்வர். அவர்களில் மூத்தவர் (துகராஜா) பிற்காலத்தில் மகாராஜாஅதிராஜா என்ற நாட்டின் உயரிய ஸ்தானத்தை அடைவார்.

b) துகராஜா அல்லது யுவராஜா:-

இவருடைய ஆட்சிக்காலத்தில் வெளியிடும் கல்வெட்டு சாசனங்களில் மகாராஜாவின் (தந்தை) சோழமகாராஜா என்ற பெயரை முதலில் பதித்து பிறகு துகராஜா என்ற தனது ஸ்தானத்தை எழுதியுள்ளார். இவருக்கு சாசனம் வெளியிடும் அதிகாரம் இருந்திருந்தாலும் மகாராஜாவுக்கு அடுத்து பெயர் எழுதும் முறையை பின்பற்றி உள்ளதை அறியமுடிகிறது.

c) **முத்துராஜா** மூத்த இரு இளவரசன்களில் இளையவனுக்குரிய இந்த ஸ்தானத்திற்கு பல சிறப்பம்சங்கள் உள்ளன. நாடாளும் அதிகாரத்தை பிரிக்க அவசியம் என்ன என்பதை உற்று நோக்கினால், காவிரி நாட்டில் கரிகாற்சோழனின் சந்ததியினர் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றி அரியணையில் அமர சகோதரயுத்தத்தில் ஈடுபட்டு பலவீனமடைந்து வீழ்ந்தனர் என்பதே காரணமாக இருந்திருக்கக்கூடும்.

முத்துராஜா ஸ்தானத்தில் இருப்பவர் பெயரானது ஒருமையில் விகுதியிடப்பட்டும் துகராஜா ஸ்தானத்தில் இருப்பவரின் பெயரானது பன்மையில் மரியாதையுடன் விகுதியிடப்பட்டும் இருப்பதன் மூலம் அடுத்து அரியணை ஏறி மகாராஜாவாக போகும் துகராஜாவுக்கே அதிகாரம் அதிகம் என்பதை இரண்டு கல்வெட்டுக்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. ஆனால், துகராஜா அல்லது யுவராஜாவைப்

போல் அல்லாமல் முத்துராஜா ஸ்தானத்தில் இருப்பவர் மஹாராஜாஅதிராஜா பெயரை குறிப்பிடாமல் தன்னிச்சையாக முதலில் தம்பெயரை கல்வெட்டுகளில் எழுதி உள்ளார். இதன்மூலம் இறையாண்மையுடன் நாட்டின் ஒரு பகுதியை தனி தலைநகரத்தில் வீற்றிருந்து பரிபாலனம் செய்ய முத்துராஜா ஸ்தானத்தில் இருந்த அவருக்கு உரிமை வழங்கப்பட்டிருந்தது என்பதை அறிகிறோம். மேலும் யுவராஜாவானவர் கூடுதல் அதிகாரத்தை பெற்றிருந்தாலும் முத்துராஜா ஆட்சிசெய்யும் பகுதியில் நேரடியாக தலையிடுவதை தவிர்க்கும் பொருட்டு இவ்வாறு அதிகாரங்கள் வரையறுக்கப்பட்டு இருந்துள்ளது என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

எரிகல் - முத்துராஜா என்ற அடைமொழியுடன் ஆட்சி செய்த தனஞ்சயவர்மன் மற்றும் புண்ணியகுமாரன் ஆகியோர் வெளியிட்ட கல்வெட்டுகளும் மகாராஜாஅதிராஜா என முதலில் குறிப்பிடாமல் தன்னிச்சையாக இறையாண்மையுடன் தங்கள் பட்டங்களை முதலில் எழுதியுள்ளனர்.

எரிகல்-தனஞ்சய முத்துராஜா ஆட்சி செய்த ரேநாடு:-

ரேநாடு என்பது வடபெண்ணை ஆற்றின் இரு துணை நதிகளுக்கு இடையே அமைந்துள்ள பகுதி ஆகும். வடமேற்கே பாயும் சித்ரவதி மற்றும் தென்மேற்கே உள்ள செய்யாறு ஆகிய இரு நதிகளுக்கு இடையே அமைந்துள்ள கடப்பா, கோலார் மாவட்டங்களையும் மற்றும் சித்தூர் மாவட்டத்தின் சில பகுதிகளையும் உள்ளடக்கியதே ஆகும்.

மேலும், ரேநாட்டின் தலைநகரமாக **சிற்பள்ளி** விளங்கியுள்ளது. இந்நகரம் சித்தூர் மாவட்டத்தின் மதனபள்ளி தாலுகாவில் தற்பொழுது உள்ளது.

புண்ணியகுமாரன் வெளியிட்ட ஒரு கல்வெட்டில் சிற்பள்ளியானது ரேநாட்டின் தலைநகரம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ரேநாடு என்றால் ரேகதிநாடு அதாவது கரிசல் மண் தேசம் என்றும் அரையர்நாடு என்றும் விளக்கம் கொடுத்துள்ளனர்.

ரேநாடு 7000 என்பது பத்தாம் நூற்றாண்டுக்குப் பின்னர் மகாராஜாபாடி 7000 என கல்வெட்டுகளில் எழுதப்பட்டிருப்பதால் **அரையர்நாடு** என்பது உறுதியாகிறது.

எரிகல் - முத்துராஜாவின் எரகுடிபாடு கல்வெட்டு:- கடப்பா மாவட்டம் கமலாபுரம் தாலுகாவில் எரகுடிபாடு என்னும் ஊரில் உள்ள சென்னகேசவ கோயிலில் இக்கல்வெட்டு உள்ளது. அதன் எழுத்தானது கலமல்லாவில் உள்ள தனஞ்சய முத்துராஜா வெளியிட்ட கல்வெட்டின் காலத்தை ஒத்துள்ளது. ஆனால், எழுத்துக்கள் ஒன்றுடன் ஒன்று கோர்த்து எழுதப்பட்டுள்ளன. தனஞ்சய முத்துராஜா இக்கல்வெட்டை வெளியிட்டதாக உறுதியாககூற இயலவில்லை. ஆனால், அதில் கிடைக்கும் தகவல்களைக் கொண்டு காகத்தியர் மற்றும் வேலநாட்டு மன்னர்கள் சோழர்களின் சந்ததியினர் என்பதற்கான தடயம் கிட்டுகிறது.

1 Svasti Śrī [||*] **Erika-**
2 **lmutturājulla**
3 Kuṇḍikāḷḷu [ni]vabukā-
4 nu ichchina pannasa
5 **Dujayarājula-**
6 **Mutturājulu Nava-**
7 **priya-Mutturājulu**
8 **Vallava-Dukarajulu** śakshi-
9 kānu ichchi[na*]pannassa

Second side

10 koṭṭambuna pā-
11 ṟaku Kuṇḍikāḷḷu-
12 ḷa ichchina pannasa

எரிகல் - முத்துராஜாவின் எரகுடிபாடு கல்வெட்டு

எரகுடிபாடு கல்வெட்டில் குறிப்பிடப்படும் நவப்பிரிய முத்துராஜா என்பவர் சுந்தரநந்தாவின் மகனாகவோ அல்லது தனஞ்சய வர்மனின் மகனாகவோ (முதலாம் மகேந்திர விக்கிரம சோழமகாராஜா) இருக்கக்கூடும் என கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கருத்து தெரிவித்து உள்ளார்.

ஆனால், முத்துராஜா என்ற ஸ்தானத்தில் நவப்பிரியன் குறிப்பிடப்படுவதால் தனஞ்சயவர்மனின் மகனான

முதலாம் மகேந்திர விக்கிரம சோழமகாராஜாவாக இருப்பதற்கு வாய்ப்பு குறைவு என்பது என்னுடைய கருத்து ஆகும். நீலகண்ட சாஸ்திரி அவர்கள் கூறியது சரியென்றால் புண்ணியகுமாரன் செப்பேட்டில் அவர் தந்தை பற்றிய குறிப்பில் நவபிரிய முத்துராஜா பெயரானது இடம் பெற்றிருக்கும் அல்லவா?

அதே நேரத்தில்தான் ரேநாட்டில் ஸ்தான உயர்வுகளும் நிகழ்ந்துள்ளன. புண்ணியகுமாரன் தனது முத்துராஜா ஸ்தானத்திலிருந்து சோழமகாராஜாவாக ஆகி உள்ளதையும் கவனத்தில்கொள்ள வேண்டும்.

எரகுடிபாடு கல்வெட்டுச்செய்தியை காண்போம். இந்தக்கல்வெட்டானது பிராமணன் ஒருவருக்கு 24 மர்தூர் (Mardur - நிலஅளவுகோல்) அளவு நிலம் தானமாக வழங்கப்பட்ட செய்தியைத் தெரிவிக்கிறது. மேலும், துஜயராஜா முத்துராஜா, நவப்பிரிய முத்துராஜா மற்றும் வல்லப துகராஜா ஆகியோர் இக்கொடைக்கு சாட்சிகளாக இருந்து உள்ளனர்.

சோழ மகாராஜாவின் உருத்துரு கல்வெட்டு:- கடப்பா மாவட்டம் கமலாபுரம் தாலுகாவில் உள்ள உருத்துரு என்னும் கிராமத்தில் அமைந்துள்ள கிணற்றின் கற்பலகையில் இக்கல்வெட்டு காணப்படுகிறது. ஏழாம் நூற்றாண்டை சார்ந்த இந்த கல்வெட்டில் எரிகல் - துகராஜா என்பவர் சோழ மகாராஜாவின் ஆட்சியில் பிராமணன் ஒருவருக்கு தானம் வழங்கிய செய்தியை தெரிவிக்கிறது.

எழுத்தமைவைக் கொண்டும் *முதிதசிலாக்ஷரன்* என்ற பட்டத்தைக் கொண்டும் உருத்துரு கல்வெட்டில் உள்ளது தனஜெயவர்மனின் மகனான முதலாம் மகேந்திர விக்கிரம சோழமகாராஜா என வரலாற்று அறிஞரான எம்.எஸ்.சர்மா அவர்கள் கூறியுள்ளார். எனவே மகேந்திர விக்கிரம வர்மனின் மூத்தமகனான குணமுதிதன் என்பவர் யுவராஜன் (அல்லது துகராஜா) ஸ்தானத்தில் இருந்து இந்த தானத்தை வழங்கியதை அறிகிறோம்.

1 ..[**Chō**]**ḻa-Mahārāju**[**ṟla**]
2 [ēḷa]**Erigal-Tuga-**
3 [**rā**]**juṟla** ichchina pannāsa
4 rāchamānaṁbuna ēbadi
5 Tiruvuḷa pāṟaku ichchi[na]
6 pannāsa dēniki[3] vakraṁ[bu]
7 vachinavānṟu[4] pañchamahā-
8 pātaku agu [|*]

சோழ மகாராஜாவின் உருத்துரு கல்வெட்டு

முத்துராஜா என்ற ஸ்தானத்திலிருந்து ஆட்சியாளர்கள் வெளியிட்ட கலமல்லா மற்றும் எரகுடிபாடு

கல்வெட்டுகளில் சோழமகாராஜா என்று தொடங்கவில்லை. அதே நேரத்தில் துகராஜா ஸ்தானத்திலிருந்து அவரின் தந்தையின் அரியணையை அலங்கரிக்கப் போகும் குணமுதிதன் வெளியிட்ட கல்வெட்டானது சோழ மகாராஜா என்றே தொடங்குகிறது.

சோழ மகாராஜாவின் இந்துகுரு கல்வெட்டு:- கமலாபுரம் தாலுகாவில் உள்ள இந்துகுரு என்ற கிராமத்தின் நுழைவு பகுதியில் உள்ள கல்லில் பொறிக்கப்பட்டுள்ளது. ஏழாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சார்ந்த இக்கல்வெட்டில் சோழ மகாராஜாவின் ஆட்சியில் எரிகல் - துகராஜா அவர்கள் கௌசிக கோத்திரத்தைச் சார்ந்த பிராமணன் ஒருவருக்கு தானம் வழங்கிய செய்தியானது உள்ளது.

1 Svasti śrī[||*]**Chōḷa-Mahā-**
2 **rājullēḷan Eriga**[l-]
3 **Dugarājul** ichchina pa-
4 nnasa Kochchiya pāṟa[Re*]
5 vas(ś)armmārikin[| *] tēni ḷa-
6 chchina vānṟu pañchamahā-
7 pātaka saṁyyuktunṟugu
8 **Âsivairuvu** likhitaṁ [*]

சோழமகாராஜாவின் இந்துகுரு கல்வெட்டு:

இந்தக் கல்வெட்டிலும் சோழ மகாராஜா என்று தொடங்கிய பிறகு எரிகல் - துகராஜா குறிப்பிடப்படுகிறார்.

எரிகல் - முத்துராஜா புண்ணிய குமாரனின் வேலுதுர்தி கல்வெட்டு:-

கமலாபுரம் தாலுகாவின் வேலுதுர்தி என்ற ஊரில் அமைந்துள்ள சென்னகேசவ கோயிலின் முன்பு காணப்படும் கல்லின் மூன்று பக்கங்களில் இந்த கல்வெட்டு செதுக்கப்பட்டுள்ளது. புண்ணியகுமார

முத்துராஜா ஆட்சியில் அதிசயரட்டகுட்டன் என்பவர் தானம் வழங்கிய (அல்லது பெற்ற) செய்தியை தாங்கிய கல்வெட்டு ஆகும்.

மாலேபாடு செப்புபட்டயத்தில் குறிப்பிடப்படும் மகேந்திர விக்கிரம சோழமகாராஜாவின் இரண்டாவது மகனான புண்ணிய குமாரன் என்பவர் முத்துராஜா ஸ்தானத்தில் இருந்தபொழுது வெளியிடப்பட்ட கல்வெட்டாகும். புண்ணியகுமாரன் அவர்கள் *எரிகல் - முத்துராஜா* என்ற அடைமொழியுடன் குறிப்பிடப்பட்டுள்ளார். மேலும், அவர் பெயரானது ஒருமையில் எழுதப்பட்டுள்ளது.

First Side

1 Svasti Śrī [|*] **Erikal-Mu[tu]rājulpriti**....**m Puṇyakumāruṇṟu**
2 Atiśaya Raṭṭakūṭṭana rkup......raṭṭakuṭṭa

Second Side

1 ....ēbhadi ma....
2 ....ri.. māsapurṇṇa[mi]..
3 ...... Pālaśarmmāri [ki]..

Third Side

1 dīni kāchi kuḍipinavāru[bhū]midānambu palambu
2 vakrapalkinavāru pañcha-mahāpāta[kam][2] bupaḍu [|*]

எரிகல் - முத்துராஜா புண்ணியகுமாரனின் வேலுதுர்தி கல்வெட்டு

முத்துராஜா என்ற ஸ்தானத்தில் இருந்தவர்கள் தன்னிச்சையாக தானம் வழங்கி சாசனம் வெளியிடும்

அதிகாரத்தை பெற்று இருந்தனர் என்பதற்கு இந்த கல்வெட்டு மேலும் ஒரு ஆதாரமாக விளங்குகிறது.

எரிகல் - முத்துராஜா புண்ணிய குமாரனின் திப்பலூர் கல்வெட்டு:- கமலாபுரம் தாலுகா திப்பலூரில் உள்ள சிவப்பு கல்லில் மிக அழகாக எழுதப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டு ஏழாம் நூற்றாண்டைச் சார்ந்தது ஆகும். திப்பலூரில் கிடைத்த புண்ணிய குமாரனின் கல்வெட்டானது செங்கல்பட்டு அருகில் உள்ள வல்லம் குடைவரை கோயிலில் காணப்படும் முதலாம் மகேந்திர வர்ம பல்லவனின் பல்லவ கிரந்த கல்வெட்டெழுத்து போல் உள்ளது. மாதம், வாரம், நாள் மற்றும் ஹோரை போன்ற குறிப்புகளுடன் திப்பலூர் கல்வெட்டு எழுதப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டானது பரத்வாஜ கோத்திரமுடைய ஒருவருக்கு வழங்கப்பட்ட கொடைச் செய்தி அடங்கியது ஆகும்.

பிரகஸ்பதி ஹோரையில் தேய்பிறையின் இரண்டாம் திதியில் கார்த்திகை மாதத்தின் புனர்பூச நட்சத்திரத்தில் இந்த கொடையானது வழங்கப்பட்டு உள்ளது. இக்கல்வெட்டில் புண்ணிய குமாரன் அவர்கள் *மருன்றபிடுகு, மாடமுதிதன், உத்தமோத்தமன், கண்ணியமான்* போன்ற சிறப்பு பெயர்களுடன் அழைக்கப்பட்டு உள்ளார். *எரிகல் - முத்துராஜா* என்ற அடைமொழியுடன் மன்னரின் பெயர் உள்ளது. அதில் எரிகல் என்பது கடப்பா மாவட்டத்தில் உள்ள ஒரு ஊரின் பெயர் என்பது சமீபத்தில் கிடைத்த சாசனம் மூலம் உறுதியாகி உள்ளது. மேலும், வேலுதுர்தி மற்றும் திப்பலூர்

கல்வெட்டுகள் வெளியிடும் பொழுது புண்ணியகுமாரனின் ஸ்தானமானது(Royal rank) *முத்துராஜா* என்பதாகும். அதன் பின் தனது ஐந்தாம் ஆட்சி ஆண்டில் வெளியிட்ட சாசனங்களில் சோழ மகாராஜா என்று அழைக்கப்பட்டு உள்ளார்.

மலேபாடு செப்பேட்டில் *முத்துராஜா* என்ற பட்டத்தை உபயோகிக்காமல் சோழ மகாராஜா என்றே தன்னை குறிப்பிட்டுள்ளார்.

குணமுதிதன் வெளியிட்ட கல்வெட்டுகளில் *எரிகல் - துகராஜா* என்று குறிப்பிட்டுள்ளதால் அவர்தான் சோழமகாராஜாவாக ஆகி இருக்கவேண்டும். ஆனால், எரிகல் - துகராஜாக்கு பதில் இளையவனான புண்ணிய குமாரன் சோழ மகாராஜாவாக அவருடைய ஐந்தாம் ஆட்சி ஆண்டு முதல் அழைக்கப்படுவதால் குணமுதிதன் அவ்விடம் இல்லை என்பது தெரிகிறது. மேலும், குணமுதிதனின் கல்வெட்டுகளும் புண்ணிய குமாரன் சோழ மகாராஜா ஆன பிறகு அவ்விடம் கிடைக்கவில்லை. அந்த சமயத்தில் சிம்மவிஷ்ணு (கி.பி. 575 - 600) என்ற பல்லவப் பேரரசன் சோழ சேர மற்றும் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெற்றான். மேலும், அந்த படையெடுப்பில் ரேநாட்டு சோழர்களும் பல்லவர்களும் இணைந்து போரிட்டு இருக்கவேண்டும். ஏனெனில், புண்ணிய குமாரனின் தந்தையான முதலாம் மகேந்திர விக்கிரம சோழ மகாராஜா மாலேபாடு செப்பேட்டில் சேர சோழ பாண்டிய அதிபதி என குறிப்பிடப்படுகிறார். இந்த படையெடுப்புக்குப் பின்னர் உறையூரை ஆட்சி செய்ய குணமுதிதன் வந்திருக்கலாம் என்றும் அதன் விளைவாக

புண்ணியகுமாரன் தன்னுடைய மூத்தசகோதரன் ஸ்தானத்திற்கு உயர்ந்து பின்னர் சோழமகாராஜாவாக அரியணைஏறி இருக்கக்கூடும் என வரலாற்றாசிரியர் சி.சுந்தரராஜன் அவர்கள் முத்தரையர் சோழர் வரலாறு என்ற நூலில் விரிவாக எழுதியுள்ளார்.

1 Svasti Śrī [1*] **Erikalla-Mutu-**
2 **[rā]ju Puṇyakumāruṇṟu** gaṇya-
3 mānunṟu maṟunṟapiḍuku madanu-
4 ditunṟ=uttamōttamunṟ-ayinavā-
5 nṟu **Chirpaliya** paṭukānu Rēnāṇḍē-
6 ḷuchu Tarkkapuḻōla p*āradāya
7 Ki ḻēvuru (Kiḻevuru) Kattiśarmmaku Tirpalū-
8 ra panāśa koṇḍa Kā[rtti]ya-chīku-
9 na Bidiya Sōmavārambu Puṇaru-
10 Pushyambu Bra(Bṛi)haspati-hōra kā-
11 nu ēmbadiye Chāmaṇakāla dha [*]

எரிகல் - முத்துராஜா புண்ணிய குமாரனின் திப்பலூர் கல்வெட்டு

புண்ணிய குமாரனின் பட்டங்கள் பெரும்பாலும் பல்லவர்களின் பட்டங்களை போல் உள்ளது.

மரூன்றபிடுகு என்றால் எதிரிகளுக்கு இடிபோன்றவன் எனப் பொருள்படும். இது முதலாம் மகேந்திரவர்ம பல்லவனின் *பாகாபிடுகு* பட்டத்தை ஒத்துள்ளது.

அவ்வாறே *மார்ப்பிடுகு* என்ற பட்டமும் பல்லவரின் பட்டம் போன்றே உள்ளது. மேலும், புண்ணியகுமாரனின் *மாடமுதிதா* என்ற அடைமொழி *மத்தவிலாசா* என்ற பல்லவனின் அடைமொழியை ஒத்துள்ளது. முத்துராஜா என்ற ஸ்தானத்தில் முதல் நான்கு ஆண்டுகள் புண்ணியகுமாரன் ஆட்சி செய்த பொழுது பெற்றிருந்த பட்டங்களை காட்டிலும் சோழ மகாராஜா ஆன பிறகு குறிப்பிடப்பட்டுள்ள பட்டங்கள் உயர்வானதாக உள்ளன.

புண்ணிய குமார சோழ மகாராஜாவின் இராமேஸ்வரம் தூண் கல்வெட்டு:- (5-**ம் ஆட்சி ஆண்டு**)

புரோத்தத்தூர் தாலுகாவில் இராமேஸ்வரம் என்ற ஊரில் அமையப் பெற்ற ராமலிங்கேஸ்வரர் கோயிலின் முற்றத்தில் உள்ள ஒரு தூணில் எழுதப்பட்டுள்ளது.

Svasti śrī [||*] **Pō-**
rmukharāma Puṇyaku-
māra Prithivīvallabha
Chōḻa Mahārājulaku
pravarddhamāna vijaya rā-[8]
rājya samvatsarambuḷ **yē**
nagu nāṇḍu **Vasantipōṟi**
Chōḻamahādēvuḷu Tāru-
munṟi Vasa[9]ntīśvarambuna Pūlla-
vaṭṭambuna-vāriki **Viripaṟi**-
[**ti**]-pulombuna reṇḍu tōṭaḷu
[ri]hitamba[10] rāchamānambuna

புண்ணிய குமார சோழ மகாராஜாவின் இராமேஸ்வரம் கல்வெட்டு

போர்முகராமன் - **பிரிதிவிவல்லபா** - **புண்ணியகுமார சோழ மகாராஜாவின்** ஐந்தாம் ஆண்டில் தாருமுந்திரி என்னும் ஊரில் எழுந்தருளியுள்ள வசந்தீஸ்வரர் கோயிலுக்கு இரண்டு தோட்டங்களை இறையிலியாக **வசந்திபோரி சோழ மகாதேவியார்** வழங்கியுள்ளார்.

இம்மகாராணியார் புண்ணிய குமாரனின் தேவியாவார். மேலும், சித்தூர் பகுதிகளை ஆட்சிபுரிந்த போரி என்னும் சிற்றரசர்களின் மரபில் தோன்றியவள் ஆவார்.

இரண்டாம் விக்கிரமாதித்ய சோழ மகாராஜாவின் சிலமாக்கூர் கல்வெட்டு:-

கமலாபுரம் தாலுகாவின் சிலமாக்கூரில் அமைந்துள்ள அகஸ்தீஸ்வரர் ஆலயத்தின் தூணில் இந்த கல்வெட்டு இருந்துள்ளது. தற்பொழுது மெட்ராஸ் மியூசியத்தில் உள்ளது.

1 Svasti[||*]Śrīmat-
2 **Vikramāditya**
3 **Chōḻamahārā**
4 **julēḷan Chō**
5 **ḻamahādēvuḷ**[1]
6 **Uttam[ā]ditya-sā**
7 mantakamuḷ Chiṟuṁ-
8 buru ēḷan ūra
9 eḻupāṟla[pā]-
10 kāṭuḻuna vaṇaṁ [pa]-
11 riyāramu maru[tu]
12 ṇḍu pā.. [pra]-
13 sādachēsiri ācha-
14 ndradararkaṁbu nilva[nu][||*]
15 Tolpa-Kāmi-Raṭṭaguḷḷu
16 Chōḻiya-Raṭṭaguḷḷu
17 Atiśa[ya-Ra]ṭṭaguḷḷu
18 Aḻikō...... ri-
19 ikki prasāda
20 pūrvvama....
21 tēni ḻachchu..
22 hāpāta[ka]..[gu]

இரண்டாம் விக்கிரமாதித்ய சோழமகாராஜாவின் சிலமாக்கூர் கல்வெட்டு

எட்டாம் நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சார்ந்த இந்த கல்வெட்டில் விக்கிரமாதித்ய சோழ மகாராஜாவின் ஆட்சியில் சோழ மகாதேவியார் தனது மகனான உத்தமாதித்தியா உடன் இணைந்து இறையிலி வழங்கி உள்ளார். உத்தமாதித்தியா என்பவர் விக்ரமாதித்யா மகனாக இருக்கலாம் என K.A. நீலகண்ட சாஸ்திரி மற்றும் வெங்கடராமையா ஆகிய இருவரும் கருத்து தெரிவித்துள்ளனர்.

நல்லசெருவுபள்ளி கல்வெட்டு:-

எரிகல் - முத்துராஜா மற்றும் சோழ மகாதேவியார் ஆகிய பெயர்களை ஒருங்கே கொண்ட கல்வெட்டாகும். கடப்பா மாவட்டத்தில் புலிவேந்தல் தாலுகாவில் நல்லசெருவுபள்ளி என்னும் ஊரிலிருந்து கோயிலுக்கு செல்லும் வழியில் உள்ள கட்டுபாவி என்றழைக்கப்படும் கிணற்றின் அருகில் இருக்கும் கல்லின் இருபுறத்திலும் எழுதப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டில் குறிப்பிடப்படும் சோழ மகாதேவியார் இரண்டாம் விக்கிரமாதித்ய சோழ மகாராஜாவின் தேவியாவார். மேலும் உத்தமாதித்தியா மற்றும் எரிகல் - முத்துராஜாவான சத்தியாதித்யா ஆகிய இருவரின் தாயார் ஆவார். சோழ மகாதேவியாரின் மற்றொரு கல்வெட்டு காணப்படும் பகுதியிலிருந்து

நல்லசெருவுபள்ளி கல்வெட்டானது 15 மைல்கள் தொலைவில் காணப்படுகிறது.

First Side

1-3 lines lost.
4 .. r[ā]ju..
5 ṇḍu ēḷa Īnt[e]-
6 ddivāḍi **Eriga-**
7 **llu-Mutt [u] rāju**
8 ēḷa Kaṅgaḷūnṟu ē-
9 ḷa Chōḻamahā-
10 rājula tēvuḷ Ma-
11 ṁkhı (ñchi ?)[po]ṟri-
12 yāru [u]ṇḍē-
13 lu Ujjayi-
14 ni ichchi [na*] pannavī
15 ..ga [ṁ]ji[pā]ṟa mā-
16 ..ḍiyāriki tēni
17 [ni*]ki .. nṟugō
18 [ṇḍapu .. lva]

Second Side

1 ....
2 kaḷuñje
3 [t]tēni ḷachchuvā-
4 [ḍi] valvar-ācha[ndrā]-
5 diṟṟu bāraṇā-
6 si vēvura vadhi[*]-

நல்லசெருவுபள்ளி கல்வெட்டு

8-ம்நூற்றாண்டின் தொடக்க காலத்தைச் சார்ந்த இக்கல்வெட்டானது பெருமளவு சேதம் அடைந்துள்ளது.

உத்தமாதித்தியா சோழ மகாராஜாவின் வேலுதுர்தி கல்வெட்டு:-

கடப்பா மாவட்டம் கமலாபுரம் தாலுகாவில் உள்ள சென்ன கேசவ சுவாமி ஆலயத்தின் முன்பு காணப்படும் ஒரு கல்லின் மூன்றுபுறங்களில் காணப்படுகிறது.

1 Svasti Śrī[*]
2 **Uttamā-**
3 **ditya-Chō-**
4 **ḻa-mahā-**
5 **rāju** pri-
6 thivirājya[ṁ*]
7 chēya
8 Immaḍi-
9 Īto[1] ichchi-
10 na pannavī-
11 sa' Kōsiya-
12 paṟa Chēdi-
13 śarmmako(k=i)chchiri

Second Side

14 Eya[ra]-
15 kallu kuḷa
16 gaṭṭuḷu
17 Vendarambu-
18 ḷu Vēṇa-
19 vōja-
20 nṟu chakshu [|*]
21 [dē]niki va-
22 krambu va-

Third Side

23 ....[2]
24 pañcha-ma-
25 hāpāta-
26 kunṟugu
27 Kachēru pā-
28 la(ra) Erama
29 [vrā]siri [*]
30 Koṭṭali
31 Kuṇaṇḍā-
32 ḷuvānṟu
33 kotte [*]

உத்தமாதித்தியா சோழமகாராஜாவின் வேலுதுர்தி கல்வெட்டு

இந்த கல்வெட்டானது எட்டாம் நூற்றாண்டை (கி.பி.725 - 750) சார்ந்தது ஆகும். புண்ணியகுமாரன் பெயர் கொண்ட கல்வெட்டுக்கு அருகிலேயே காணப்படுகிறது. உத்தமாதித்தியா என்பவர் தொடக்கத்தில் சாமந்தகனாக இருந்து பின்னர் சோழ மகாராஜா ஸ்தானத்திற்கு உயர்ந்துள்ளார். உத்தமாதித்திய சோழ மகாராஜாவின் ஆட்சியில் கௌசிக கோத்திர பிராமணன் ஒருவர் தானம் பெற்ற செய்தியானது கல்வெட்டாக பொறிக்கப்பட்டுள்ளது.

விஜயாதித்த சோழனின் சாமலூர் கல்வெட்டு:-

ஜம்பலமடுவு தாலுகாவின் சாமலூர் என்ற ஊரின் எல்லையில் உள்ள கல்லின் நான்கு புறத்திலும் எழுதப்பட்டு உள்ளது. இந்த கல்வெட்டு பெருமளவு சேதம் அடைந்து இருந்தாலும் கர்னல்.மெக்கன்சியின் உதவியாளர்கள் சேகரித்த தகவல் மூலம் (Eye-copies) ஓரளவுக்கு வரிகள் கிடைத்துள்ளன.

First Side

1 to 3 Svasti Śrī [*] **Prithivivallabha-Vijayādi[tya*]-Chōḷarāju] iru**[2]-
4 **[vādire]ṇḍu** [cha]**va-**
5 chcharambu] pravartti-
6 llan **Vāṇarājul Pā-**
7 **ṁbuḷiggi** ēḷuchu Palla-
8 vādirājula [Kū]chapō
9 ṛiyāri tāṁbul Chō-
10 ḷamahārājula amma

Second Side

All lines lost.

Third Side

1 .. pāgadanṛa...
2 ḷōḷuru Kūchapōṛiki-
3 [nētra] .. da .. ichchi a[na]nta-
4 nāka .. de [rlana] rāchamā-
5 nambunan ēbhādi maṛu-
6 ntuṛlu nēla ala[gha] chinta u-
7 [ttara]bu kaṭṭu Kauṇḍilya-gōtrasya pe-
8 nbāra Rēvas(ś)armāṇa [pu]ttrasya Aggi-
9 S(Ś)ārmārik-ichchina dati [*]

Fourth Side

[Svadatāṁ paradatāṁ vā yō harēti vasundharā[ṁ*] shashṭi-varusha-sahasrāṇi vishṭā]-[3]-
1 yā[ṁ] jā-
2 yā(ya)tē
3 krimi[ḥ *]

விஜயாதித்த சோழனின் சாமலூர் கல்வெட்டு

விஜயாதித்த சோழ மகாராஜாவின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டில் அவருடைய தாயாரான சோழ மகாதேவியார் அளித்த கொடையானது கல்வெட்டாக பொறிக்கப்பட்டுள்ளது. உத்தமாதித்தியா மற்றும் எரிகல் - முத்துராஜா சத்யாதித்யா ஆகிய இருவரின் ஆட்சி காலத்திற்கு பிறகு ரேநாட்டின் சில பகுதிகள்

பானராஜக்களின் வசம் சென்றுள்ளது. சாளுக்கியரின் மேலாதிக்கத்தின் கீழ் பாணராஜாக்கள் ஆட்சி செய்துள்ளனர். இந்த கல்வெட்டை வெளியிட்ட சோழ மகாராஜாவின் பெயரானது விஜயாதித்தா என்ற சாளுக்கியரின் பெயராக இருப்பதன் மூலம் ரேனாடு சாளுக்கியரின் ஆளுகைக்கு உட்பட்டு இருந்துள்ளதை அறியமுடிகிறது. மேலும், **பிரித்விவல்லபா** என்ற அடைமொழியுடன் விஜயாதித்த சோழன் குறிப்பிடப்படுவதால் சாளுக்கியரின் மேலாதிக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமாக ஆட்சி செய்துள்ளதை அறியமுடிகிறது. சாளுக்கியரின் கீழ் சிற்றரசனாக இருந்த பாணராஜா பிறகு விஜயாதித்த சோழனுக்கு அடங்கி ஆட்சிசெய்து உள்ளதை அச்சோழனின் தாயார் கொடையளித்த கல்வெட்டின் மூலம் அறியலாம்.

இரண்டாம் மகேந்திர சோழனின் பூதிடிகட்டபள்ளி கல்வெட்டு:-

அனந்பூர் மாவட்டத்தில் உள்ள ஹிந்துபூர் தாலுகாவின் பூதிடிகட்டபள்ளி என்னும் கிராமத்தின் வடகிழக்கு பகுதியில் காணப்படும் நடுகல்லில் எழுதப்பட்டுள்ளது. இந்த கல்வெட்டு எட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியை சார்ந்தது ஆகும். போர்க்களத்தில் அரிவரஜம்மா என்னும் மாவீரன் தண்டியம்மங்கு என்பவனை துளைத்து விட்டு தானும் விழுந்தான் என்ற செய்தியானது நடுகல்லில் எழுதப்பட்டுள்ளது. இந்த போர்கள வீரதீர நிகழ்வை பூதிலியை ஆட்சிசெய்யும் கபிபோலா முத்துராஜா

ஆச்சரியமுடன் கண்டான் என்று கல்வெட்டு தெரிவிக்கிறது.

மேலும், கபிபோலா முத்துராஜா என்பவர் *மானரவி*, *மரூன்றபிடுகு* என்றெல்லாம் அழைக்கப்பட்ட இரண்டாம் மகேந்திர வர்மனின் மகன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார்.

சிற்பள்ளியை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்த புண்ணிய குமாரனுக்கும் *மரூன்றபிடுகு* என்ற அடைமொழி இருந்துள்ளது. அதன் பொருளானது எதிரிகளுக்கு இடிபோன்றவன் என்பதாகும்.

ஸ்ரீகாந்த சோழன் வெளியிட்ட மெட்ராஸ் மியூசியம் செப்புபட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இளஞ்சோழா என்பவர் இரண்டாம் மகேந்திரனின் மூத்த மகனாவார்.

1 Śrī **Mahēndran** M[ā*]naravi Māṟurāpi[ḍugu]
2 maganṟu **Pudali** ēḷuvānṟu **Kāpi-Boḷa-Mutturāju**
3 achcha[r*]vvuganu Arivarajamunṟu anvānṟu
4 **Dantiyamma-Maṁgu** tōḷan[3] poḍuchi paḍiyen.[4*]

இரண்டாம் மகேந்திரசோழனின் பூதிடிகட்டபள்ளி கல்வெட்டு

பூதிடிகட்டபள்ளி நடுகல்(Hero stone) கல்வெட்டில் குறிப்பிடப்படும் கபிபோலா என்பவர் இரண்டாம் மகேந்திரனின் இளைய மகன் என்பதை அவரின் முத்துராஜா பட்டம் எடுத்துரைக்கிறது.

ஸ்ரீகாந்த சோழனின் மெட்ராஸ் மியூசியம் செப்பேடு:-

மெட்ராஸ் மியூசியத்தில் நான்கு தகடுகளை கொண்ட ஒரு செப்பேடு தொகுப்பு உள்ளது. அரச முத்திரை எதுவும் இல்லாமல் வெறுமனே ஒரு வளையத்தில் இந்த நான்கு தகடுகளும் கோர்க்கப்பட்டு உள்ளன. அந்த செப்பேட்டை வெளியிட்ட மன்னரின் முன்னோர்களை பற்றிய தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரம்மா, மரீசி போன்ற புராண பெயர்களை தொடர்ந்து *சோழன்* அதனையடுத்து *கரிகாலன்* ஆகியபெயர்கள்இடம்பெற்றுள்ளன.

அந்தப் பரம்பரையில் *சுந்தரநந்தா* பிறந்தார் என்றும் அவரையடுத்து *நவராமா, எரியம்மா, விஜயகம்மா, வீரார்ஜுனா, அக்கிராணிபிடுகு, கோ-கிள்ளி, மகேந்திரவர்மன், இளஞ்சோழா, நிரூபகம்மா, திவாகரன்* மற்றும் *ஶ்ரீகாந்தா* ஆகியோர் தோன்றினர் எனவும் செப்பேடு தெரிவிக்கிறது.

மேலும், இந்த செப்பேட்டை வெளியிட்ட ஶ்ரீகாந்தா என்பவர் **சோழஅதிராஜா** என்று குறிப்பிடப்படுகிறார்.

பிரேதீஸ்வரர் என்னும் கோயிலின் தின வழிபாட்டுக்காக மந்தாரா என்னும் கிராமமானது பாலசக்திகுரு என்பவருக்கு பிரம்மதேயமாக கொடுக்கப்பட்டதாக இச்செப்பேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரேனாட்டு சோழர்கள் வெளியிட்ட கல்வெட்டுகள் மற்றும் செப்புபட்டயங்களை கண்டோம். அவற்றில் கிடைத்த தகவல்களை அடிப்படையாகக் கொண்டு மரபு பட்டியல் இனி காண்போம்.

1) புண்ணியகுமாரன் வெளியிட்ட மாலேபாடு செப்பேடு

2) சத்யாதித்தாவின் மாலேபாடு கல்வெட்டு

3) சோழ மகாராஜாவின் மாலேபாடு சாசனங்கள்

4) ஸ்ரீகாந்த சோழனின் மெட்ராஸ் மியூசியம் செப்பேடு

மேற்கண்ட ஆவணங்களை ஆய்வு செய்ததன் மூலம் ரேநாட்டு சோழ மன்னர்கள் கரிகாலனின் சந்ததியினர் என்பது உறுதியாகிறது. ஆனால் எப்பொழுது உறையூரிலிருந்து பண்டைய தமிழகத்தின் வட எல்லையான வேங்கட மலையின் வடக்கு அடிவாரத்தின் நிலப்பகுதிகளை ஆட்சி செய்ய சென்றனர் என்ற தகவல் கிடைக்கப் பெறவில்லை.

கரிகாலன் காவிரிக்கு கரைகட்டியவன் என்றும் அந்த பேரரசருக்கு கட்டுப்பட்டு பல்லவ மன்னனான திரிலோசனா தலைமையில் ஏனைய சிற்றரசர்கள் கரைகட்டும் பணியினை செய்து முடித்தார்கள் என்றும் ரேனாட்டு சோழர்கள் தங்களின் சாசனங்களில் தெரிவித்து உள்ளனர்.

கரிகாலனின் ஆட்சி நிலப்பரப்பு கிருஷ்ணா நதிவரை பரந்து இருந்தபொழுது அவரின் சந்ததியினர் அந்தப்பகுதியில் ஆட்சி பொறுப்பேற்று இருந்துள்ளனர் என்பதனை உணரமுடிகிறது.

ரேனாட்டு சோழர்களில் முதலாமவன் நந்தி வர்ம சோழன் (கி.பி. 550-575) என்பது கிடைக்கும் ஆதாரங்களின் அடிப்படையில் உறுதியாகிறது. பல்லவ நந்தி வர்மனின் (கி.பி. 485 - 510) பெயரை நந்தி வர்ம சோழனுக்கு அவர்தந்தை சூட்டியுள்ளதன் மூலம் நந்திவர்ம

சோழனுக்கு முன்பிருந்தே ரேனாட்டு சோழர்களின் ஆட்சி தொடங்கியுள்ளதை கணிக்கமுடிகிறது.

இந்த மரபு பட்டியலானது நந்தி வர்ம சோழனிடம் இருந்து தொடங்கி இரண்டு கிளைகளாக பிரிகிறது. ஆனால், புண்ணிய குமாரனின் மாலேபாடு செப்பேட்டின் வரிகளை நோக்கும் பொழுது கி.பி. ஏழாம் நூற்றாண்டின் மத்தியில் மூன்று கிளைகளாக சிம்மவிஷ்ணு, சுந்தரநந்தா மற்றும் தனஞ்செய வர்மன் ஆகியோரின் சந்ததியினர் ஆட்சி செய்ததை அறிகிறோம். சிம்மவிஷ்ணுவை தவிர்த்து மற்ற இருவருடைய சந்ததியினரின் சாசனங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. பல்லவ மன்னனான சிம்மவிஷ்ணு (கி.பி.575-600) படையெடுத்து காவிரிதேசத்தை ஆண்ட மற்றொரு சிம்மவிஷ்ணுவை வென்றார் என பல்லவ ஆவணங்கள் சொல்வதன் மூலம் நந்திவர்ம சோழனின் மூத்த மகனான சிம்மவிஷ்ணுவாக இருக்கலாம் என சி.சுந்தரராஜன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

மேலும், நந்திவர்ம சோழனின் மூத்தமகன் உறையூரை களப்பிரரிடமிருந்து மீட்டு ஆட்சி செலுத்திய பொழுது பல்லவனுக்கு இணங்காமல் சுதந்திரமாக சோழர் ஆட்சியை நிறுவி இருக்கலாம் என்றும் பல்லவ பேரரசின் நிலைத்தன்மையை உறுதி செய்யும் நோக்கில் சிம்மவிஷ்ணு பல்லவன் உறையூர் மீது படையெடுத்து இருக்கலாம் என்பதையும் உணரமுடிகிறது.

பல்லவனான சிம்மவிஷ்ணு சோழ பாண்டிய சேர தேசத்தை வென்ற கையோடு தனஞ்செய வர்மனின் பேரனும் மகேந்திர விக்கிரம வர்ம சோழ மகாராஜாவின்

மூத்த மகனுமான குணமுதிதனை உறையூரின் அரசனாக முடிசூட்டி இருக்கலாம் என்பதும் புலப்படுகிறது.

இதன்மூலம் காவிரிதேசமான உறையூரில் சோழர்கள் தனிப்பெரும் சக்தியாக உருவெடுக்காவண்ணம் பல்லவ மன்னன் சிம்மவிஷ்ணு தடுத்து நிறுத்தியுள்ளார். மேலும் தமக்கு கட்டுப்பட்ட சிற்றரசாக ஆக்கியதோடு பாண்டிய படைகள் பல்லவ நாட்டை நெருங்க இயலாவண்ணம் சோழர்களை அதாவது முத்தரையர்களை காவல் அரணாக வைத்திருந்தான் என்பதும் தெளிவாகிறது.

ரேனாட்டு சோழர்களின் மரபுபட்டியலை உற்று நோக்கும் பொழுது சில இடைவெளிகள் உள்ளன. தனஞ்செய வர்மனின் வாரிசான புண்ணிய குமாரனுக்கு அடுத்து ஆட்சிக்கு வருபவர் யார் என்ற தகவல் கிடைக்கப் பெறவில்லை. பூதிலி என்ற தலைநகரத்திலிருந்து ஆண்ட சுந்தரநந்தா மற்றும் அவருடைய சந்ததியினரின் ஆட்சியானது நீண்ட நெடியதகாக உள்ளது.

நந்திவர்ம சோழனின் மூன்றாவது மகனான தனஞ்செய வர்மன் மற்றும் அவருடைய சந்ததியினரின் கல்வெட்டு மற்றும் செப்பேடு சாசனங்களின் மூலம் ரேனாடு, ஹிரண்யராஷ்டிரம் மற்றும் சித்தி1000 ஆகிய பகுதிகளை அவர்கள் ஆட்சிசெய்துள்ளனர் என்பதை அறிகிறோம்.

மதனப்பள்ளி தாலுகாவில் உள்ள சிற்பள்ளியை தலைநகராக கொண்டு ரேநாட்டையும், மாலேபாடு என்னும் தலைநகரத்திலிருந்து ஹிரண்ய ராஷ்டிரத்தையும் ஆண்டுள்ளனர்.

பாண அரசர்களும், நொளம்ப பல்லவர்களும் சோழர்களுடன் தொடர்ந்து ஆதிக்க போராட்டத்தில் ஈடுபட்டு வந்திருந்தாலும் இரண்டாம் மகேந்திர வர்மனின் ஆட்சி காலத்தில் வடபெண்ணை தேச சோழ எல்லையானது பரந்து விரிந்து இருந்துள்ளது.

2

தஞ்சை சோழர்கள்

விஜயாலய சோழன் என்ற தலைப்பில் இந்த நூலினை எழுதும் நோக்கம் பிற்கால சோழப் பேரரசை நிர்மாணித்த அந்த மன்னன் யார் என்று ஆதாரத்துடன் விடை காண்பது ஆகும்.

இடைக்காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக காவிரி தேசத்தை ஆண்ட மன்னர்களை பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. மங்கையர்கரசியாரின் தந்தை மணிமுடி சோழன் என்றும் பாண்டியன் நின்றசீர் நெடுமாறன் வல்லத்தை வென்று பிறகு உறையூரையும் ஒரே நாளில் கைப்பற்றி சோழனை வென்றான் என்றும் பாண்டிக்கோவை பாடல்கள் பாடல்கள் மூலம் அறிகிறோம்.

ஒரே காலகட்டத்தில் வல்லம் மற்றும் உறையூரில் முத்தரையர்களும் சோழர்களும் இருந்துள்ளதாக அறிகிறோம். முத்தரையர் என்போர் களப்பிரர் என்றும் பாண்டியனின் கிளைபிரிவு என்றும் தவறான

கருத்துக்களை பல வரலாற்று ஜாம்பவான்கள் முன்வைத்து முத்தரையர் ஆட்சி நடைபெற்ற பொழுது சோழர்கள் உறையூர் மற்றும் பழையாறையில் அதிகாரமின்றி முடங்கி இருந்ததாக தவறான கருத்துக்களை விதைத்தார்கள். உண்மையில் முத்தரையர் என்பவர் யார்? சோழருக்கும் முத்தரையருக்கும் என்ன உறவு என்பதை விரிவாக காண்போம்.

செந்தலை கல்வெட்டு :-

"...துத்த பெரும்பிடுகு முத்தரை
யனாயின குவாவன் மாறனவ
ன் மகன் இளங்கோவதி யரைய
னாயின மாறன் பரமேஸ்வரன
வன் மகன் பெரும்பிடுகு முத்த
ரைய னாயின சுவரன் மாறனவ
னெடுப்பித்த பிடாரி கோயில். அவன்
எறிந்த ஊர்களும் அவன் பேர்க
ளும் அவனைப் பாடினோர் பேர்களும் இ
த்தூண் கண்மெலெழுதினவை"

தஞ்சை மாவட்டத்தில் உள்ள செந்தலை என்னும் ஊரில் அமைந்துள்ள சுந்தரேஸ்வரர் ஆலயத்தின் நான்கு தூண்களில் காணப்படும் கல்வெட்டுகள் முத்தரைய மன்னர்களை பற்றிய முக்கியமான தகவல்களை தருகின்றது. கல்தூண்களின் மேற்பகுதி வெட்டி

உடைக்கப்பட்டு உள்ளதால் சிலவரிகள் நமக்கு கிடைக்கவில்லை.

செந்தலை அருகேயுள்ள நியமம் என்னும் ஊரில் காளாபிடாரி கோயிலை பெரும்பிடுகு சுவரன் மாறன் எடுப்பித்துள்ளான். அம்மன்னனை புகழ்ந்து நான்கு புலவர்கள் பாடிய பாடல்களை தூண்களில் பொறித்துள்ளனர்.


செந்தலையானது சந்திரலேகை சதுர்வேதிமங்கலம் என்று வழங்கப்பட்டு முத்தரையர்களின் முக்கிய நகரமாக இருந்துள்ளது. செந்தலை சுந்தரேஸ்வரர் கோயிலில் முத்தரையர் சோழர் பாண்டியர் மற்றும் பல்லவர்களின் கல்வெட்டுகள் காணப்படுகிறது.

செந்தலையில் உள்ள முத்தரையர் கல்வெட்டு கி.பி. எட்டாம் நூற்றாண்டின் முதல் பாதியை சார்ந்தது ஆகும். பெரும்பிடுகு முத்தரையரின் சாதனைகளை கல்வெட்டு வரிகள் எடுத்துரைக்கிறது. அவைகள் வெண்பாக்களாக இயற்றப்பட்டுள்ளன. செந்தலை தூணில் உள்ள கல்வெட்டு முத்தரைய மன்னர்களின் மூவரின் பெயர்களை குறிப்பிடுகிறது. அவையாவன

> பெரும்பிடுகு முத்தரையன் ஆயின குவாவன் மாறன்
>
> (அவருடைய மகன்)
>
> இளங்கோ அதியரையன் ஆயின மாறன் பரமேஸ்வரன்
>
> (அவருடைய மகன்)
>
> பெரும்பிடுகு முத்தரையன் ஆயின சுவரன் மாறன்

ரேனாட்டு சோழர்களில் எப்படி ஸ்தானங்கள் இருந்தனவோ அவ்வாறே முத்தரையன் மற்றும் அதியரையன் என ஸ்தாதானங்கள் செந்தலை கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குவாவன் மாறன் என்பவர் முத்தரையர் ஸ்தானத்தில் இருப்பதால் அவருடைய தந்தைக்கு இளைய மகன் என்ற உண்மை விளங்குகிறது.



புண்ணியகுமார முத்துராஜா
செப்பு பட்டையம்
(ரேணாடு)

சுவரன்மாறன் முத்தரையன்
செந்தலை கல்வெட்டு
(காவிரிநாடு)

சிம்மவிஷ்ணு பல்லவனின் (கி.பி. 575 - 600) படையெடுப்புக்குப் பின்னர் குணமுதிதன் ஆட்சி பொறுப்பில் நியமிக்கப்பட்டிருந்தார் என்பதை ஏற்கனவே

கண்டோம். அவருடைய மகனாக குவாவன் மாறன் இருந்திருப்பார் என கருதலாம். எவ்வாறு ரேநாட்டில் ஆட்சி அதிகாரம் இளைய இளவரசனுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டதோ அவ்வாறே காவிரி நாட்டிலும் முத்தரையன் என்ற ஸ்தானத்தில் வழங்கப்பட்டுள்ளது.

முத்துராஜா என்ற ஸ்தானம் முத்தரையன் என்றும், அதிராஜா என்னும் ஸ்தானமானது அதியரையன் என்றும் இருந்துள்ளதை அறியமுடிகிறது. ரேநாட்டில் எவ்வாறு முத்துராஜா ஸ்தானத்தில் இருந்த தனஞ்செயனுக்கு தனிதலைநகரத்துடன் கூடிய பகுதி ஆட்சி செய்ய வழங்கப்பட்டதோ அவ்வாறே முத்தரையனுக்கும் வழங்கியுள்ளனர்.

முத்துராஜா என்ற ஸ்தானத்தில் இருந்த இளவரசன் யுவராஜனுக்கு இளையவன் என்பது அனைத்து வரலாற்றாசிரியர்களும் முழுமையாக ஏற்றுக் கொண்ட விஷயம் ஆகும். அதுபோலவே, முத்தரையன் என்பவரும் யுவராஜனுக்கு இளையவன் ஆவார். எனவே, செந்தலை கல்வெட்டில் குறிப்பிடப்படும் குவாவன் மாறன் முத்தரையர் மற்றும் சுவரன் மாறன் முத்தரையர் ஆகியோர் அவரவர் தந்தைக்கு இரண்டாதாக பிறந்த மகன்கள் என்பது வெளிச்சத்திற்கு வருகிறது.

சுந்தரேஸ்வரர் ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டுகளில் பல்வேறு பட்டப் பெயர்களில் பெரும்பிடுகு முத்தரையர் அழைக்கப்படுகிறார்.

1, வான்மாறன்

2, ஸ்ரீ மாறன்

3, தஞ்சைக்கோன்
4, வல்லக்கோன்
5, அதிசாகசன்
6, ஸ்ரீ கள்வர்கள்வன்
7, அபிமானதீரன்
8, ஸ்ரீ சத்ருமல்லன்
9, தமராலயன்
10,செருமாறன்
11, சத்ருகேசரி

பன்னிரண்டுக்கும் மேற்பட்ட போர்களில் பெரும்பிடுகு முத்தரையன் பெற்ற வெற்றிகளை நான்கு பெரும்புலவர்கள் அழகிய வெண்பாக்களாக பாடியுள்ளதை கல்வெட்டுகளில் காணலாம். ஒரு பாடலில்கூட சோழனை வென்றதாக பாடவில்லை. பாண்டியன், சேரன் மற்றும் இருக்கு வேளிர்களை வென்றதாக பாடியுள்ளனர். மாறன் என்பது முதல் மற்றும் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையர்களின் இயற்பெயர் ஆகும். மாறன் என பெயர் சூட்டி இருப்பதால் முத்தரையர்கள் பாண்டியனின் கிளைமரபாக இருக்கலாம் என்று பல வரலாற்று ஆசிரியர்கள் கருத்துக்களை முன் வைத்துள்ளனர். அதற்கு வலுசேர்க்க கீழ்காணும் பாடலை மேற்கோள் காட்டினர்.

“வெங்கட் பொருகயல் செற்வெல் கொடியோன் வான்மாறன்
செங்கட் கரும் பகடு சென்றுழக்க வன்குலத்தார்

தேரழுந்தி மாவழுந்தச் செங்குருதி மண்பரந்த
ஊரழுந்தி யூரென்னு மூர்."

இப்பாடலில் வரும் *வெங்கட் பொரு கயல்* மற்றும் *வெல் கொடியோன்* போன்ற வரிகளுக்கு தவறான விளக்கம் கொடுத்துள்ளனர்.

மேலும், மாறன் என்றால் போர்வீரன் என்றும் தமிழ்குடிமகன் என்றும் பொருள்படும். மாறன் என்ற பெயரானது குவாவன் மாறனுக்கு சூட்டப்படும் தருணத்தில் சோழநாடு பாண்டியனிடம் தோற்றிருந்தது என்பதை நின்றசீர் நெடுமாறனின் வீரத்தைப் புகழ்ந்து இயற்றப்பட்டுள்ள **பாண்டிக்கோவை** என்ற நூல் மூலம் அறியலாம்.

“வேல்நக நீண்டகண் ணாலும் விரும்பும் சுரும்பரற்றும்
தேன்நக நீண்டவன் டார்கண்ணி யாய்சிறி துண்டுதெவ்வர்
வானகம் ஏறவல் லத்துவென் றான்கொல்லி மால்வரை வாய்க்
கானக வாணரும் கண்டறி யார்இக் கமழ்தழையே”

பாண்டிக்கோவை *பாடல் -137*

இப்பாடலில் கூன்பாண்டியன் வல்லத்து போரில் வென்றான் என்று பாடப்பட்டுள்ளது. மேலும், அப்போரில்

எதிர்த்து போரிட்ட சோழஅரசன் வானகம் அடைந்தான் என்றும் கூறுகிறது.

இப்படையெடுப்பு நடக்கும்பொழுது குவாவன் மாறன் முத்தரையனின் தந்தை ஆட்சி நடைபெறுகிறது. போரில் இறந்தது யார் என்ற தகவல் இல்லை என்றாலும் குவாவன் மாறன் முத்தரையரின் மூத்த சகோதரன் போரில் இறந்து இருக்கலாம்.

மங்கையர்கரசியார் குவாவன் மாறனின் சகோதரியாக இருக்கலாம். ஏனென்றால் இப்போரில் வெற்றி பெற்ற கூன்பாண்டியன் மணிமுடி சோழனின் மகளான மங்கையர்க்கரசியாரை மணந்து கொள்கிறான். அச்சமயத்தில் குவாவன் மாறன் முத்தரையன் “மாறன்” என்ற பெயரை பெறுகிறான்.

போரில் வென்ற கூன்பாண்டியன் மிக புகழ்வாய்ந்த அரசன் ஆவான். சோழநாட்டைதவிர்த்து சேரநாடு மற்றும் கொங்கு நாட்டை கைப்பற்றி ஆட்சிபுரிகிறான். இவன் பெற்ற வெற்றிகள் அனைத்தும் பாண்டிக்கோவையாக பாடப்பட்டுள்ளது.

“தேன் நிறவார் கண்ணிச் செம்பியன் மாறன் செழுங்குமரி”

பாண்டிக்கோவை பாடல்- 338

என்ற வரியின் மூலம் செம்பியன் ஆகிய மாறன் (சோழ பாண்டிய நாடுகளுக்கு உரியவன்) என்று கூன்பாண்டியன் புகழப்படுகிறான்.

“பொன்னி நாடன் பகைபோல் மெலிகின்றது”

பாண்டிக்கோவை பாடல் -343

என்ற பாடல் வரியின் மூலம் முத்தரையர்களின் தொடக்க காலத்தில் பாண்டியன் மங்கையர்கரசியாரை மணந்ததால் சோழநாட்டின் மீது பகையின்றி நட்புறவுடன் இருந்துள்ளான் என்பதை உணரமுடிகிறது.

இக்காலகட்டத்தில் மாறன் என்ற பெயர் குவாவன் மாறனுக்கு சூட்டப்பட்டுள்ளது. “மாறன்” என்று பெயர் கொண்டதால் முத்தரையர்களை பாண்டியனின் கிளை வழியாக இருக்கலாம் என்று கருதியது தவறானதாகும்.

செந்தலை கல்வெட்டு கூறும் பெரும்பாலான போர்களில் சுவரன் மாறன் பாண்டியனை வெற்றி கொண்டதாகவே பாடப்பட்டுள்ளது. அவற்றில்

“பல்லவன் வெல்ல தென்னவன் முனையை கெடச்சென்ற மாறன்”

என்ற கல்வெட்டு வரிகள் மூலம் பல்லவனுக்காக பாண்டியனை போரிட்டு வென்றுள்ளார் என்பது உறுதியாகிறது. எனவே, மாறன் என்ற பெயரை வைத்து முத்தரையரை பாண்டியனின் கிளைவழி என்று அழைக்கலாகாது.

“வெங்கட் பொருகயல் செற் வெல் கொடியோன்”

என்ற செந்தலைக் கல்வெட்டு பாடல் வரியின் மூலம் முத்தரையரின் கொடி கயல் என்றும் வேல் என்றும் கூறினர். அதனைக்கொண்டு முத்தரையர் மன்னர்களை பாண்டியனிடம் தொடர்பு படுத்தினர். செந்தலைக் கல்வெட்டு பாடல் வரிகள் இயற்றப்பட்ட அதே

காலகட்டத்தைச் சார்ந்த நாலடியார் பாடல் வரிகளைக் காண்போம்.

“தண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று கண்ணில்புன் மாக்கள் கவற்ற விடுவெனோ”

நாலடியார்-44

பாடல் விளக்கம்:-

பெண்ணின் கண்ணை பார்த்து தெளிந்த நீரில் பூத்துள்ள குவளைமலர், போரிடும் வேல் என்றெல்லாம் சொல்லி அவளை பெற ஏங்குகின்றனர்.

போரிடும் கயல் மீன்கள், போரிடும் வேல் போன்ற கொடியை உடையவன் என்ற பொருளில் செந்தலை கல்வெட்டில் தமிழ் வெண்பா வரிகள் இயற்றப்பட்டு உள்ளதை அறியமுடிகிறது.

மேலும், பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு எனத்தொடங்கும் பாசுரத்தில்

“கருவாய்ச்சின வெங்கட் களிற்றுனுக் கவளம் எடுத்துக்கொடுப்பானவன்”

என்ற வரிகள் இடம் பெற்றுள்ளன.

“வெங்கட் களிற்றின் மிசைப்பவனி”

திருவிளை - வெள்ளையானை 7

போன்ற வரிகளில் வெங்கட் களிறு என்றால் வெண்ணிற யானை என்று பொருள் ஆகும்.

ஆகவே, *“வெங்கட் பொருகயல் செற்வெல் கொடியோன்”* என்ற வரிகள் வெண்மையான போரிடும் கெண்டைமீனை போன்றதும் போர்செய்யும் வேலினை போன்றதுமான கொடியை உடையவன் சுவரன் மாறன் என அழகான உவமையுடன் பாடப்பட்ட வெண்பா ஆகும்.

எனவே, முத்தரைய மன்னர்களை பாண்டிய கிளைவழி எனக்கூறி மேற்கோள் காட்டிய அனைத்து காரணிகளும் தவறாக அர்த்தம் கொள்ளப்பட்டவை என்பது விளங்குகிறது.

ரேநாட்டில் தனஞ்சய முத்துராஜா, புண்ணிய குமார முத்துராஜா, சத்யாதித்ய முத்துராஜா மற்றும் கபிபோலா முத்துராஜா ஆகியோரின் சாசனங்கள் கிடைத்தாலும், அவர்களை **முத்துராஜா மன்னர்கள்** என்று எந்த வரலாற்று ஆசிரியர்களும் அழைத்ததில்லை. அதற்கு மாறாக **சோழர்கள்** என்று ஆவணப்படுத்தியுள்ளனர்.

நந்திவர்ம சோழன்
(கி.பி. 550-575)

சுந்தரநந்தா

எரிகல் - முத்துராஜா
தனஞ்செய வர்மன்

முதலாம் மகேந்திர விக்கிரம
சோழமகாராஜா
(கி.பி. 600-625)

எரிகல் துகராஜா
குணமுதிதன்

எரிகல் - முத்துராஜா
புண்ணிய குமாரன்

ஆனால், இங்கே **முத்தரைய மன்னர்கள்** என்று அடையாளப்படுத்தியதோடு களப்பிரர் அல்லது பாண்டிய கிளை வழியாக இருக்கலாம் என்றும் கூறிவந்தனர்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் ரேனாட்டு சோழர்களின் வம்சாவளியினர் காவிரி தேசத்தை ஆட்சிசெய்து வந்ததும் அவர்கள் பெரும்பாலும் பல்லவனுக்கு கட்டுப்பட்டு இருந்ததையும் அறிவோம்.

சோழ மன்னனான கரிகால் சோழனின் ஆட்சிக் காலத்தில் பல்லவ மன்னன் சோழர்களுக்கு கட்டுப்பட்ட சிற்றரசனாக இருந்தான்.

பின்னாளில் பல்லவப் பேரரசர்களின் கீழ் கரிகாலனின் சந்ததியினர் சோழநாட்டில் சிற்றரசர்களாக ஆட்சி செய்யும் அளவுக்கு ஆளாயினர்.

இடைக்கால சோழர்கள் தொடர்பாக கிடைத்த கல்வெட்டுகளில் முதன்மையானது கி.பி. 1897 ம் ஆண்டு படியெடுக்கப்பட்ட செந்தலை கல்வெட்டாகும். செந்தலை தூண் கல்வெட்டு குறிப்பிடும் முத்தரையர்கள் பற்றிய தகவலானது நாலடியார் நூலில் உள்ளது.

“பெரு முத்தரையர் பெருதுவந் தீயும்
கருணைச் சோறாவர் கயவர் - கருணையைப்
பேரு மறியார் நனி விரும்பு தாளான்மை
நீரு மகிழ்தாகி விடும்”

என்று 200வது பாடலும்,

“மல்லன் மாஞாலத்து வாழ்பவரு ளெல்லான்
செல்வ ரெனினுங் கொடாதவன் - நல்கூர்ந்தார்

நல் கூர்ந்தக் கண்ணும் பெரு முத்தரையரே
செல்வரை சென்றிர வாதார்"

என்று 296வது பாடலும் தெரிவிக்கின்றன.

கரிகாற் சோழனின் சந்ததியினர் சண்டையிட்டுக் கொண்டு ஒருவர் மீது மற்றொருவர் படையெடுத்து பலவீனமடைந்து இருந்துள்ளார்கள்.

சோழன் நலங்கிள்ளி கரிகாலனின் சந்ததி என்பதை அவனைப் பற்றிய பாடல்கள் மூலம் அறியலாம். நலங்கிள்ளிக்கு பட்டம் சூட்டப்பட்டவுடன் அரச குடும்பத்தினருக்குள் பகை மூண்டுள்ளது. நெடுங்கிள்ளி என்பவன் திருவாரூரில் இருந்த சோழ அரசமரபினன்ஆவான்.

நலங்கிள்ளி உறையூரில் இருந்து புறப்பட்டு நெடுங்கிள்ளியின் ஆவூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். கோவூர்கிழார் மத்தியஸ்தம் செய்தார்.

இவ்வாறு அரச குடும்பத்துக்குள் பகைமை பாராட்டி பலவீனம் அடைந்த தருணத்தில் களப்பிரர் சோழ நாட்டைக் கைப்பற்றிக் கொண்டனர். அதன் விளைவாகவே வடபெண்ணை தேசத்தை ஆண்டு வந்த கரிகாலனின் சந்ததியினர் பட்டத்து யுவராஜனின் இளைய சகோதரனுக்கு முத்துராஜா என்ற ஸ்தானத்தை உருவாக்கி, சகோதர பகைமை ஏற்படாமல் தவிர்த்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது.

களப்பிரர்கள் சோழ தேசத்தை கைப்பற்றி சுமார் இரண்டு நூற்றாண்டுகள் ஆட்சி செய்துள்ளனர். களப்பிர

அரசர்கள் சமணத்தை போற்றியுள்ளனர். பாண்டி நாட்டையும் கைப்பற்றி ஆண்டு வந்துள்ளனர். பாண்டியன் கடுங்கோன் என்பவன் ஆறாம் நூற்றாண்டில் களப்பிரர்களை வென்று பாண்டி நாட்டை மீட்டான் என்பதை ஏற்கனவே கண்டோம்.

அதனைத் தொடர்ந்து, ரேனாட்டு சோழனான நந்திவர்மனின் சந்ததியினர் சோழநாட்டை களப்பிரர்களுக்குபின் ஆட்சி செய்துள்ளனர். சமணம் சார்ந்த நாலடியார் நூலில் முத்தரையர் பற்றிய இரு பாடல்கள் உள்ளதால் முத்தரையர் என்போர் களப்பிரராக இருக்கலாம் என்ற வாதம் சில வரலாற்றாசிரியர்களால் முன் வைக்கப்பட்டு நூல்களும் வெளிவந்தன. அவர்கள் ஒரு உண்மையை கவனிக்க தவறினர். சமணத்தை போற்றிய களப்பிரர் வீழ்ந்து நூறு ஆண்டுகளுக்குப் பிறகும் சமண சமயம் இருந்துள்ளது. பாண்டியன் கடுங்கோன் களப்பிரர்களிடமிருந்து பாண்டிநாட்டை மீட்ட பின்னர் ஒரு நூற்றாண்டு கழித்து கூன்பாண்டியன் சமண சமயத்தை தழுவியுள்ளான்.

“மானி” என்ற இயற்பெயருடைய மங்கையர்க்கரசியார் கூன்பாண்டியனின் பட்டத்து மகாராணியாவார். அவ்வம்மையார் மணிமுடி சோழனின் புதல்வி என்பதை அறிவோம். மங்கையர்கரசியாரின் அழைப்பை ஏற்று ஞானசம்பந்தர் பாலகனாக மதுரை சென்று சமணர்களுடன் வாதம் செய்த பிறகு கூன்பாண்டியனை குணமாக்குகிறார். இதன் மூலம் களப்பிரர் வீழ்ந்தும் சமணம் உடனே விழாமல் நூற்றாண்டுக்கு மேல் தழைத்திருந்தது என்பது உறுதியாகிறது. அவ்வாறு

இருக்க, சமண சமயம் சார்ந்த நூலான நாலடியாரில் முத்தரையரை புகழ்ந்து பாடல் பாடப்பட்டுள்ளதால் முத்தரையர் என்போர் களப்பிரராக இருக்கலாம் என சில வரலாற்று அறிஞர்கள் தவறுதலாக கூறிவந்தனர்.

இதன் மூலம் களப்பிரர் ஆட்சி முடிவடைந்த பின்னர் பாண்டியன் மற்றும் சோழனை சார்ந்து சிலகாலம் சமணர்கள் இருந்துள்ளனர் என்பதை அறியமுடிகிறது. களப்பிரர் வீழ்ந்தவுடன் சமணம் முழுவதுமாக வீழவில்லை என்பதும் தெளிவாகிறது.

ஆகவே, முத்தரையர் என்போர் சோழ அரசமரபினர் என்பதை வரலாற்று ஆசிரியர்கள் இனி கருத்தில் கொள்ள வேண்டும். ரேநாட்டில் ஆட்சி செய்த எரிகல் - முத்துராஜா சத்தியாதித்யா வெளியிட்ட சாசனத்தில் மூன்று தலைமுறைகளை குறிப்பிட்டது போல், பெரும்பிடுகு முத்தரையன் சுவரன் மாறனும் தனது பாட்டனார் மற்றும் தந்தையாரின் பெயருடன் அவர்களுடைய ஸ்தானங்களையும் செந்தலை கல்வெட்டில் தெரிவித்து உள்ளார். இதன் மூலம் குவாவன் மாறன் முத்தரையன் தஞ்சையை தலைமையிடமாகக் கொண்டு(Collatteral Line) ஆட்சி செய்திருக்க வேண்டும் என்பதை அறிகிறோம்.

எனவே உறையூரை தலைமையிடமாகக் கொண்டு குவாவன் மாறன் முத்தரையரின் தந்தையும், மூத்த சகோதரனும் ஆட்சி செய்துள்ளதை உணரமுடிகிறது.

குவாவன் மாறனின் மூத்த சகோதரன் பாண்டியனின் சோழநாட்டு மீதான படையெடுப்பின் பொழுது

இறந்ததால் ஒட்டுமொத்த சோழநாடும் குவாவன் மாறன் முத்தரையரின் கீழ் வந்திருக்கலாம்.

புதுக்கோட்டை மாவட்டத்தில் கீரனூருக்கும் கிள்ளுக்கோட்டைக்கும் இடையில் அமைந்துள்ளது மலையடிப்பட்டி குகைக்கோயில் ஆகும்.



மலையடிப்பட்டி குகைக்கோயில்

இம்மலையில் சிவனுக்கும் திருமாலுக்கும் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளது. சிவாலயமானது வாகீஸ்வரர்

குகைக்கோயில் என அழைக்கப்படுகிறது. இக்கோயிலில் காணப்படும் கல்வெட்டில் ஆலயமானது தந்திவர்மனின் 16 வது ஆட்சி ஆண்டில் விடேல்விடுகு முத்தரையனாயின குவாவன் சாத்தன் என்பவனால் எடுப்பிக்கப்பட்டது என உள்ளது.

தந்திவர்ம பல்லவப் பேரரசனின் இறுதிகாலத்தில் குவாவன் சாத்தன் முத்தரையரின் இளைய மகனான சாத்தன் பழியிலி தன்னிச்சையாக பல்லவனின் பெயர் மற்றும் ஆட்சி ஆண்டு குறிப்பிடாமல் கல்வெட்டுகள் வெளியிட்டு இருக்கிறான்.

மேலும், கோஇளங்கோ முத்தரையன் (கோ- அரசன், இளங்கோ - இளவரசன்) என்ற பட்டத்துடன் அழைக்கப்படுவதன் மூலம் சாத்தன் பழியிலி என்பவன் இளவரசனாக இருக்கும் பொழுதே அதாவது அவரின் தந்தையான குவாவன் சாத்தன் முத்தரையர் உயிருடன் இருக்கும் பொழுதே அரசனாக பொறுப்பேற்று உள்ளான் என்பது தெளிவாகிறது.

அதே காலத்தில் முதலாம் வரகுண பாண்டியன் பற்றி பெரும்பற்றப்புலியூர் நம்பி என்ற புலவர் புகழ்ந்து பாடல் இயற்றியுள்ளார்.

“மற்று நேரொவ்வா வரகுணன் பெருவலி வளவன் துற்று சேனையும் சுந்தரன் அருளினால் தொலைந்து வெற்றி பூண்டபின் மகிழ்ந்தவன் மேதகு நாடும் கொற்ற மேன்மையும் கொண்டனன் மண்தலம் மதிக்க”

-திருவிளை. புராணம்

இப்பாடலில் வரகுணபாண்டியன், பெருவலிமையுடைய சோழவளவனின் சேனையை சுந்தரேஸ்வரர் அருளினால் வென்று சோழநாட்டை அரசாண்டான் என்று கூறப்பட்டுள்ளது.

குவாவன் சாத்தன் முத்தரையரின் ஆட்சியின்பொழுது பல்லவப் பேரரசரான தந்திவர்மன் பெயர் மற்றும் ஆட்சி ஆண்டுடன் கல்வெட்டு தொடங்குகிறது. பல்லவனின் மேலாதிக்கத்திலிருந்த சோழனை வெற்றி பெற்றதாக பாண்டியன் தெரிவிப்பதன் மூலம், அதன்பின் ஆட்சி கட்டிலில் பாண்டியனால் அமர்த்தப்படும் சாத்தம் பழியிலி கோஇளங்கோ முத்தரையன் என்பவன் தந்திவர்ம பல்லவனின் பெயர் மற்றும் ஆட்சியாண்டை தனது கல்வெட்டுகளில் குறிப்பிடாமல் இருந்ததற்கான காரணத்தை அறிய முடிகிறது

குவாவன் சாத்தனின் இரண்டாவது மகனான சாத்தம் பழியிலி முத்தரையன் சுதந்திரமாக பல்லவ மேல் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு ஆட்சி செய்யத் தொடங்கியது தந்திவர்மன் ஆட்சிக்காலத்தில் ஆகும்.

தந்திவர்மனுக்கு பிறகு மூன்றாம் நந்திவர்மன் ஆட்சி கட்டிலில் அமர்கிறான்.

விஜயாலய சோழீஸ்வரம்:-

பல்லவ பேரரசின் கீழ் ஆட்சி செய்த குவாவன் சாத்தன் முத்தரையரின் மூத்த மகனான சாத்தம் பூதி இளங்கோவதி யரையன் எடுப்பித்த விஜயாலய

சோழீஸ்வரம் என்னும் ஆலயம் நார்த்தாமலைகுன்றின் மேலே காணப்படுகிறது.

ரேநாட்டில் முத்துராஜா ஸ்தானத்தில் ஒருவர் இறையாண்மையுடன் தனியாக நாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செலுத்தும் பொழுது அவருடைய மூத்த மகன் துகராஜா அல்லது யுவராஜா எனவும், இளைய மகன் முத்துராஜா எனவும் அழைக்கப்பட்டார் என்பதை கண்டோம். அதுபோலவே முத்தரையன் ஒருவர் ஆட்சிக்கட்டிலில் இருக்கும் பொழுது அவருடைய மூத்த மகன் அதியரையன் என்றும் இளையவன் முத்தரையன் என்றும் வழங்கப்பட்டதை அறிகிறோம்.



ரேநாட்டில் யுவராஜா எவ்வாறு அங்கு சோழமகாராஜா என்ற நாட்டின் உயர்ந்த ஸ்தானத்தை அடைந்தாரோ

அவ்வாறே அதியரையனானவன் சோழன் என்ற பட்டத்திற்கு உரியவனாக இருந்துள்ளான் என்பது தெளிவாகிறது.

எனவே, அதியரையன் ஸ்தானத்தில் இருந்த சாத்தம் பூதியும் சோழனாவான் என்பதை அறிகிறோம். ரேநாட்டில் எவ்வாறு யுவராஜனான குணமுதிதனும் மற்றும் முத்துராஜாவான புண்ணிய குமாரனும் அவர்களின் தந்தையான முதலாம் மகேந்திர விக்கிரமன் அரியணையில் சோழ மகாராஜாவாக இருக்கும்பொழுதே ஆட்சிபுரிந்தனரோ அவ்வாறே குவாவன் சாத்தன் முத்தரையன் மன்னராக இருந்தபொழுதே அவருடைய இரு புத்திரர்களும் ஆட்சிபுரிந்தனர் என்பது நார்த்தா மலையின் மீது உள்ள ஆலயங்கள் எடுத்துரைக்கின்றன.

மேற்கு நோக்கி அமைந்துள்ள சிவன் கோயிலில் வலதுபுறம் உள்ள துவாரபாலகரின் கீழ் செதுக்கப்பட்டுள்ள கல்வெட்டு பின்வருமாறு:

“ஸ்வஸ்தி ஸ்ரீ சாத்தம் பூதியான
இளங்கோவதி யரையர் எடுப்பித்த கற்றளி
மழை இடித்தழிய மல்லன் விதுமன்
ஆயின தென்னவன் தமிழதியரையன் புதுக்கு”

எனவே, நார்த்தாமலை குன்றின்மேல் அமைந்துள்ள அழகிய சிற்ப வேலைகளுடன் கூடிய கோயிலை சாத்தம் பூதி இளங்கோ அதியரையன் எடுப்பித்தான் என்பது உறுதியாகத் தெரிகிறது. நார்த்தாமலையின் சரிவில்

உள்ள சிறிய சமதள பகுதியில் இந்த கோயிலானது கட்டப்பட்டுள்ளது.

மழையின் பொழுது இடிவிழுந்து சேதம் அடைந்த கோயிலின் பகுதியை புதுப்பிக்த மல்லன் விதுமன் என்பவன் இக்கல்வெட்டை செதுக்கியுள்ளார். அவர் சாத்தம் பழியிலியின் மகளான பழியிலி-சிறியநங்கை என்பவளை மணந்தவர் எனக் கருதப்படுகிறது.

பிற்கால பாண்டியனான மாறவர்மன் சுந்தரபாண்டியன் ஆட்சி கல்வெட்டும் நார்த்தாமலையில் மீது செதுக்கப்பட்டுள்ளது. அந்த கல்வெட்டானது சாத்தம் பூதி இளங்கோவதியரையனால் கட்டப்பட்ட கோயிலை **விஜயாலய சோழீஸ்வரம்** என தெரிவிக்கிறது. இக்கல்வெட்டில் **உடையனார் விஜயாலய சோழீஸ்வரர் கோயிலில் வைகாசி திருவிழா** கொண்டாடுவதற்கு கொடை அளிக்கப்பட்ட விவரம் கூறப்பட்டுள்ளது.

விஜயாலய சோழீஸ்வரம் 1240 சதுர அடி பரப்பில் முழுவதும் கருங்கற்களினால் அமைந்த கட்டுமான கோயில் ஆகும். இந்த ஆலயம் “ஓம்” என்ற ஓங்கார அமைப்பை சார்ந்ததாக உள்ளது. கருவறையைச் சுற்றிவர ஏதுவாக தஞ்சை பெரிய கோயிலை போன்று சிறிய பிரகாரம் உள்ளது. (தஞ்சை பெரிய கோயிலில் அந்த சிறிய கருவறை சுற்றுப் பிரகாரத்தில்தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய ஓவியங்கள் உள்ளன).

3

விஜயாலய சோழன்

பிற்கால சோழப் பேரரசை நிறுவியவர் விஜயாலய சோழன் என்பதால் அந்த மன்னன் யார் அவருடைய தந்தை யார் போன்ற கேள்விகள் கடந்த ஒரு நூற்றாண்டாக பல வரலாற்று அறிஞர்களால் எழுப்பப்பட்டு வருகிறது. ஒருசில வரலாற்று ஆசிரியர்கள் அதற்கு விடைகாண முயற்சியும் செய்துள்ளனர்.

பல்லவருக்கும் முத்தரையருக்கும் அடங்கியிருந்த சோழர்கள் உறையூர் மற்றும் பழையாறையில் எவ்வித அதிகாரமுமின்றி இருந்தனர் என்றும், சரியான தருணம் பார்த்து பழையாறையில் வீற்றிருந்த விஜயாலய சோழன் தஞ்சையை முத்தரையர்களிடமிருந்து கைப்பற்றிக் கொண்டான் என்றும் கூறினர்.

சில வரலாற்று ஆசிரியர்கள் ரேனாட்டு வம்சாவளியான ஸ்ரீகாந்த சோழனின் மகன் விஜயாலயன் என்று கூறி அன்பில் மற்றும் வேலஞ்சேரி செப்பு பட்டயங்களை மேற்கோள் காட்டினர். அவ்விரு

பட்டயங்களில் விஜயாலய சோழனின் முன்னோர்களைப் பற்றி தெரிவிக்கப்பட்டுள்ள தகவல்களை ஆராய்வோம்.

அன்பில் செப்பேடு:-

இப்பட்டயம் சுந்தர சோழரின் நான்காம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்டுள்ளது. அம்மன்னர் ராஜராஜ சோழனின் தந்தை ஆவார். அன்பில் பட்டயத்தில் விரிவாக கூறப்பட்டுள்ள மரபு பட்டியலை ஆய்வு செய்யும்பொழுது

சிபியின் வம்சத்தில் சோழன் தோன்றினான்.

சோழனின் வம்சத்தில் கிள்ளி சென்னி போன்றோர் தோன்றினர்.

அதனைத் தொடர்ந்து அந்தப் பரம்பரையில் கோச்செங்கணான்

பிறந்தான். அவனுக்கு நல்லடிக்கோன் மகனாக பிறந்தான் என்று மிகத் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அடுத்து நல்லடிக்கோன் வம்சத்தில் வல்லபா பிறந்தான் என்று உள்ளது.

அன்பில் பட்டயத்தை முதலில் தொகுத்து வெளியிட்ட திரு.கோபிநாத் ராவ் அவர்கள் வல்லபா என்பதற்கு வளவன் என்று விளக்கம் கூறினார். ஆனால் கரிகாலன், கிள்ளி மற்றும் சென்னி போன்றவர்கள் வளவன் என்று பல்வேறு இலக்கிய நூல்களில் அழைக்கப்பட்டது அனைவரும் அறிவர்.

அவ்வாறிருக்க கரிகாலன், கிள்ளி, சென்னி, கோச்செங்கணான், நல்லடி ஆகியோர் பெயர்களை கூறியபின் வளவன் என்று குறிப்பிடுவார்களா?

இப்பட்டயத்தை வெளியிட்ட சுந்தரசோழன் காலத்தில் எவருக்கும் தெரியாதா?

மேலும், ஸ்ரீகாந்த சோழனை வல்லபா வம்சத்தில் தோன்றியவன் என்று கூறியது ஏன்?

விஜயாலய சோழனின் மகனாக ஆதித்த சோழன் குறிப்பிடப்பட்டுள்ளார். ஆதித்தனின் மகனாக முதலாம் பராந்தகனும் அவருடைய மகனாக அரிஞ்செயனும் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளனர். அரிஞ்செயனின் மகனான சுந்தர சோழன் இப்பட்டயத்தை வெளியிட்டுள்ளார்.

கோச்செங்கணானின் மகன் நல்லடி என்று தெரிவித்துள்ள பொழுது விஜயாலய சோழன் இன்னாருக்கு மகனாக பிறந்தான் என்று கூறாமல் ஸ்ரீகாந்த சோழனின் வம்சத்தில் தோன்றினான் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

Kōchchaṅgaṇṇāṉ: (built temples for the lord of Gaurī in all countries, v. 13).

மகன்

Nallaṭikkōṉ.

வம்சம்

Vaḷabha.

வம்சம்

Śrīkaṇṭha.[2]

வம்சம்

Vijayālaya.

மகன்

Rājakēsarin: (built large temples of stone to Śiva on both banks of the Kāvērī).

மகன்

Vīra-Chōḷa: (reduced Madhurā, married the daughter of the Kēraḷa king who was also called Paḻuvēṭṭarayar).

மகன்

Ariñchika: (married Kaly-

Parakēsarin.

Mṛityujit.

Vīrasēna.

Chitra *or* Vyāghrak

Pushpakētu.

Kētumāla.

Samudrajit.

Pañchapa.

Nṛimṛiḍa.

Manōratha.

Perunatkiḷḷi.

அன்பில் செப்பேடு


> ஶ்ரீகாந்த சோழன் என்பவர் விஜயாலய சோழனின் தந்தையின் காலத்தைச்(Contemperory to VidelVidugu Kuvāvaṉ cāttaṉ muttaraiyar)சேர்ந்தவர் ஆவார். விஜயாலய சோழன் ஶ்ரீகாந்தனின் மகனாக ஒருவேளை இருந்திருந்தால் ஏன் ஶ்ரீகாந்தா வம்சத்தில் விஜயாலயன் தோன்றினான் என்று அன்பில் பட்டயத்தில் தெரிவித்து உள்ளனர்.

விஜயாலய சோழன் மலையடிப்பட்டி விடேல்விடுகு முத்தரையனாயின குவாவன் சாத்தனின் மூத்தமகன் என்பதை முன்னரே கண்டோம். நந்தி வர்மனின் மூன்று மகன்களும் சுபிட்சமாக வாரிசுகளை ஈன்றெடுத்து ஆட்சி செய்தனர் என்பதை புண்ணிய குமாரனின் செப்புபட்டயம் தெரிவிக்கிறது.

அன்பில் பட்டயமானது கரிகாலனுக்கு அடுத்து கிள்ளி சென்னி போன்றவர்களை குறிப்பிட்டு அவர்களின் வம்சத்தில் கோச்செங்கணான் தோன்றினான் என நந்திவர்ம சோழனின் முதல் கிளை வழிவந்த **சிம்மவிஷ்ணுவை** குறிப்பிடுகிறது.

அதன் பின்னர் கோச்செங்கணானின் மகனாக **நல்லடிகோன்** பெயரை பட்டயத்தில் தெரிவித்து அடுத்து நந்திவர்ம சோழனின் மற்றொரு கிளை வழியில் தோன்றிய **பிரிதிவிவல்லபா - விஜயாதித்த சோழனை** நல்லடிகோனின் வம்சத்தில் உதித்ததாக கூறுகிறார்கள். அதனையடுத்து, நந்திவர்ம சோழனின் இரண்டாவது மகனான சுந்தரநந்தா கிளைவழியில் தோன்றிய **ஶ்ரீகாந்த**

சோழஅதிராஜா பெயரை குறிப்பிடுகிறார்கள். அதற்குப்பின் **சாத்தம் பூதி இளங்கோ வதியரையன்** ஸ்ரீகாந்த சோழனின் வம்சத்தில் தோன்றினான் என்று தங்களின் முன்னோர்களைப் பற்றி அன்பில் பட்டயத்தில் சுந்தரசோழர் குறிப்பிட்டுள்ளார்.


நந்திவர்மன் சோழன்
கி.பி. 550-575
சிம்மவிஷ்ணு
மகன்
நல்லடிகோன்
கி.பி. 600-625
சுந்தரநந்தா
எரிகல்
முத்துராஜா
தனஞ்சய
வர்மன்
வல்லபா
ஶ்ரீகாந்தா
சோழஅதிராஜா
குவாவன்
சாத்தன்
முததரையன்
வம்சம்
மகன்
சாத்தன் பூதி
இளங்கோவதி யரையன்
(விஜயாலய சோழன்)

தஞ்சையை ஆட்சி செய்த பிற்கால சோழப்பேரரசர்கள் வெளியிட்ட சாசனங்களில் விஜயாலயனின் தந்தை குவாவன் சாத்தன் முத்தரையன் என்று குறிப்பிடவில்லை. ஏனெனில், முத்துராஜா மற்றும் முத்தரையன் என்று தங்கள் மூதாதையர்களை தெரிவிக்கும்பொழுது சோழஅதிராஜா இல்லை என்பது வெளிப்படும். அதோடு மட்டுமில்லாமல், சாத்தம் பூதி இளங்கோவதி யரையனின் தந்தை குவாவன் சாத்தன் முத்தரையனின் ஆட்சிக்காலத்தில் சுந்தரநந்தா வழிவந்த ஸ்ரீகாந்தா என்பவர் சோழஅதிராஜாவாக இருந்ததால் அன்பில் பட்டயத்தில் ஸ்ரீகாந்தாவின் பெயர் குறிப்பிடப்பட்டு அந்த வம்சத்தில் சாத்தம் பூதி தோன்றினான் என்று கூறப்பட்டுள்ளது.

நந்திவர்ம சோழனின் முதல் கிளைவழி மரபினரை கூறி பிறகு மூன்றாம் கிளை வழியில் வந்த வல்லபா பெயரை தெரிவித்து அதனைத் தொடர்ந்து இரண்டாவது கிளைவழியில் தோன்றிய சோழ அதிராஜாவான ஸ்ரீகாந்தா பெயரை குறிப்பிட்டு பிறகு அந்த வம்சத்தில் சாத்தம் பூதி தோன்றினான் என்று அன்பில் பட்டயத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வல்லபா என்ற விஜயாதித்த சோழனின் பெயரைக் கொண்டே அவர் சாளுக்கியனான விஜயாதித்தனுக்கு கட்டுப்பட்டு இருந்துள்ளது தெரிகிறது. விஜயாதித்த சோழனின் தந்தை காலத்தில் சாளுக்கியனின் கைஓங்கியுள்ளது. அப்பகுதியை ஆண்ட **பானராஜா**

சாளுக்கியருக்கு கட்டுப்பட்டு ரேநாட்டின் ஒரு பகுதியை ஆட்சி செய்துள்ளான்.

ரேநாட்டின் இரண்டாம் விக்ரமாதித்யனின் மகன்களான உத்தமாதித்ய சோழமகாராஜா மற்றும் சத்தியாதித்யாவின் ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் சாளுக்கியர் அப்பகுதிகளை தனதாக்கிவுள்ளனர். அதனால் விஜயாதித்தன் என்று சாளுக்கியனின் பெயரானது ரேநாட்டு சோழனுக்கு சூட்டப்பட்டிருப்பதை அறிய முடிகிறது.

ஆனால் விஜயாதித்த சோழன் வெளியிட்ட கல்வெட்டில் தன்னை பிரித்விவல்லபா என்று அழைப்பதன் மூலம், அம்மன்னன் பலம் பொருந்திய சாளுக்கியனிடம் இருந்து ரேநாட்டை மீட்டு சுதந்திரமாக ஆட்சி செய்துள்ளதை அறியமுடிகிறது. மேலும் சாளுக்கியனுக்கு கட்டுப்பட்டிருந்த பானராஜாவையும் தனக்கு கட்டுப்பட்ட சிற்றரசனாக ஆக்கியுள்ளான் வல்லபா.

எனவே, அன்பில் பட்டயத்தில் தங்களது முன்னோர்களை குறிப்பிடும்பொழுது வல்லபா பெயரானது குறிப்பிடப்பட்டுள்ளது.

பிற்கால சோழர்கள் ஏன் விஜயாலயனின் தந்தை பெயரை எந்த செப்பேட்டிலும் குறிப்பிடுவதில்லை என்பதற்கான காரணம் விளங்குகிறது. ஏனெனில் விஜயாலயனின் தந்தை முத்தரையன் ஸ்தானத்தில் ஆட்சி செய்தவர் என்பதே காரணமாகும்.

வேலஞ்சேரி செப்பேடு:- முதலாம் பராந்தக சோழனின் 25வது ஆட்சி ஆண்டில் கி.பி. 932 ல் வெளியிடப்பட்டுள்ளது. இப்பட்டயத்தின் சமஸ்கிருத பகுதியில் மன்னரின் முன்னோர்களைப் பற்றிய தகவல் உள்ளது. அன்பில் பட்டயம் போன்று நந்திவர்ம சோழனின் வாரிசுகளை குறிப்பிடாமல் கரிகாலன் - கோச்செங்கணான் - ஒற்றியூரான் - விஜயாலயன் - ஆதித்தன் என்று தெரிவித்து உள்ளனர்.

கரிகாலனை பற்றி குறிப்பிடும்பொழுது இமயத்தில் புலிக்கொடி பதித்தவன் என்றும், காவிரியின் இருபக்கமும் கரை கட்டியவன் என்றும், அரண்மனைகள் நிறைந்த நகரமாக காஞ்சியை அலங்கரித்தவன் எனவும் வேலஞ்சேரி பட்டயம் கூறுகிறது.

முற்பிறவியில் சிலந்தியாக இருந்து இறைவன் சிவனின் அருளால் கோச்செங்கணான் பிறந்தான் என்று பட்டயம் தெரிவிக்கிறது. அதற்கடுத்து அவ்வம்சத்தில் ஒற்றியூரான் பிறந்தான் என்று கூறுகிறது. ஒற்றியூரானுக்கு மகனாக எதிரிகளுக்கு நெருப்பைப் போன்ற சிறந்த மாவீரன் பிறந்தான் என்று அப்பட்டயம் தெரிவிக்கிறது.

அவனுக்கு மகனாக ஆதித்தன் பிறந்தான் என்றும் இப்பட்டயத்தை வெளியிட்ட முதலாம் பராந்தக சோழன் ஆதித்தனுக்கு பிறந்தான் என்பதையும் செப்பேடு எடுத்துரைக்கிறது. இதன்மூலம், விஜயாலயனின் தந்தையான குவாவன் சாத்தன் முத்தரையன் பெயரை நேரடியாக குறிப்பிடாமல் தவிர்த்துள்ளனர் என்பது புரிகிறது. ஏற்கனவே கூறியபடி, முத்தரையன்

ஸ்தானமானது இளவரசனின் இளையவனுக்கு உரியது என்பதால் அவ்வாறு தங்களின் முன்னோராக முத்தரையர் ஸ்தானத்தில் இருந்தவரை குறிப்பிடும்பொழுது தாங்கள் சோழஅதிராஜா இல்லை என்பது வெளிப்படும் என்பதால் காவிரி தேசத்தை ஆண்ட விஜயாலயனின் முன்னோர்களை பற்றி ஆவணப்படுத்தவில்லை என்பதை முன்னரே கண்டோம்.

வேலஞ்சேரி பட்டயத்தில் கோச்செங்கணானை குறிப்பிட்டு அதற்கடுத்து ஒற்றியூரான் என தெரிவித்துள்ளதன் நோக்கமும் தெளிவாக தெரிகிறது.

உதாரணத்துக்கு உறையூரான், ஆவூரான் போன்ற வார்த்தைகள் எந்த ஒரு தனி அரசனையும் சுட்டிக் காட்டுவதில்லை. உறையூரான் என்றால் உறையூரை ஆட்சி செய்தவன் மற்றும் பூர்வீகமாகக் கொண்டவன் என்று பொருள்படும். கரிகால் சோழனின் சந்ததியான நந்திவர்ம சோழனையும் உறையூரான் என்றழைக்கலாம்.

ஒரு ஊரின் பெயரோடு ஒரு மன்னரை அழைப்பது என்பது அம்மன்னர் அந்த ஊர் சார்ந்த பரம்பரையில் வந்தவன் என்பதே சரியாகும். வேலஞ்சேரி செப்பேட்டில் அதுபோல் ஒற்றியூரான் என்று உள்ளதால், அவர் ஒருவேளை ஸ்ரீகாந்த சோழனாக இருக்கலாம் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் தங்களின் கருத்துக்களை பதிவு செய்துள்ளனர்.

ஸ்ரீகாந்தன் ஒற்றியூரான் என்றால் அவருடைய தந்தை மற்றும் பாட்டனார் ஆகியோரும் ஒற்றியூரார்தானே? எப்படி ஒரே ஒரு அரசனை எடுத்துக் கொள்ளஇயலும்?.

குவாவன் சாத்தன் முத்தரையன் காலத்தில் ஸ்ரீகாந்தா என்பவர் சோழஅதிராஜாவாக இருந்ததால் விஜயாலயனின் தந்தை பெயரை நேரடியாக குறிப்பிடாமல், ஒற்றியூரை ஆளும் அரசகுழுவை சார்ந்தவனான குவாவன் சாத்தனுக்கு மகனாக மாவீரன் விஜயாலயன் பிறந்தான் என்பதை லாவகமாக வேலஞ்சேரி பட்டயத்தில் தெரிவித்துள்ளனர்.

திருவிந்தளூர் செப்பேடு:-

சோழ மன்னர்களான ராஜாதிராஜன் மற்றும் இரண்டாம் ராஜேந்திரன் ஆகியோரால் வெளியிடப்பட்ட ஆணைகளை தாங்கி வீரராஜேந்திரனின் காலத்தில் எழுதப்பட்டு கிடைத்துள்ள முதல் செப்பேடு ஆகும். இச்செப்பேட்டில் கூறப்பட்டுள்ள சோழர்களின் மரபுவழி பின்வருமாறு:

இப்பட்டயத்திலும் விஜயாலயனின் தந்தை பெயரை குறிப்பிட விரும்பாமல் மனோரதன் என்னும் மன்னன் பெயரை பொதுவாக கோச்செங்கணானுக்கு அடுத்து குறிப்பிட்டுள்ளனர். ஆனால், விஜயாலயனை பற்றி கூறும்பொழுது, சோழ வம்சத்தில் விஜயாலயன் என்ற மன்னன் தோன்றினான் என்றும் பல சிற்றரசர்கள் அவனிடம் அடிபணிந்தனர் என்றும் பலம்பொருந்திய கம்பவர்மனை முற்றிலும் வென்றான் என்றும் தஞ்சையை ரவிகுலத்தின் தலைநகரமாக அழகுபடுத்தினான் என்றும் வானுயர்ந்த கட்டிடங்களை எழுப்பினான் என்றெல்லாம் புகழ்ந்துள்ளனர்.

இதன் மூலம் விஜயாலயனுக்கு முன்புவரை ரவிகுலத்தின் முதன்மை தலைநகரமாக தஞ்சாவூர் இல்லை என்பது தெரிகிறது. செந்தலை கல்வெட்டில் இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையர் தஞ்சைக்கோன் என்றும் வல்லக்கோன் என்றும் அழைக்கப்பட்டு உள்ளார். மேலும் தஞ்சை நற்புகழாளன் என்று புலவர்களால் பாடப்பட்டு உள்ளார்.

ரேநாட்டில் எவ்வாறு முத்துராஜா என்ற ஸ்தானத்தில் இருந்த நந்திவர்மனின் இளைய மகனுக்கு சிற்பள்ளி நகரம் இருந்ததோ, அவ்வாறே முத்தரையன் ஸ்தானத்தில் இருந்த மன்னருக்காக தஞ்சாவூர் நகரம் இருந்துள்ளதை அறியமுடிகிறது. உறையூர் மற்றும் பழையாறை போன்ற நகரங்களில் சோழனும் தஞ்சையில் முத்தரையனும் இருந்துள்ளதை அறிய முடிகிறது.


திருவிந்தளூர் செப்பு பட்டயத்தில் விஜயாலயன் பலம்பொருந்திய கம்பவர்மனை வென்றான் என்று உள்ளது. திருத்தணி செப்பேட்டை உற்று நோக்கினால் பல்லவர்களின் அப்போதைய நிலையை அறியலாம். பல்லவ மன்னனான அபராசித வர்மன் வெளியிட்ட செப்பேடு வேலஞ்சேரியில் கிடைத்தன. இரு ஆணைகளை தாங்கியதாய் மொத்தம் ஐந்து தகடுகள் கிடைத்தன. அபராசித வர்மனின் ஒன்பதாம் ஆட்சி ஆண்டில் வெளியிடப்பட்ட இச்செப்பேடு கூறும் தகவல் பின்வருமாறு:

கம்பவர்மனில் இருந்து தொடங்கும் இந்த சாசனம், கம்பவர்மன் பல்லவ நாட்டின் அரியாசனத்தை நிருபதுங்கனிடம் இருந்து கைப்பற்றியதாக கூறுகிறது.

கம்பவர்மனுக்கும் கங்க அரச குலத்தில் தோன்றிய விஜயா என்பவருக்கும் மகனாக அபராசித வர்மன் பிறந்தான் என்ற முக்கியமான தகவலை வழங்குகிறது. பலம் பொருந்திய பல்லவ சாம்ராஜ்யத்தின் வீழ்ச்சிக்கும், பிற்கால சோழ சாம்ராஜ்ய எழுச்சிக்கும் காரணமாக பல்லவ அரச குடும்பத்தில் ஏற்பட்ட ஆட்சி அதிகாரப் போட்டி காரணமாக இருந்திருந்துள்ளது. அதற்கு சற்று காலம் முன்பு வரை, பாண்டியனின் ஆதிக்கத்தில் சோழ நாடானது 18 ஆண்டுகள் இருந்துள்ளதை அறிவோம்.

சுமார் பதினெட்டு ஆண்டுகளுக்கு முதலாம் வரகுண பாண்டியனின் கல்வெட்டுகள் பல்வேறு இடங்களில் சோழநாட்டில் கிடைக்கின்றன. சோழநாட்டின் மீதான படையெடுப்பின் பொழுது ஆக்ரோஷமாக சண்டையிட்ட பலம்பொருந்திய சாத்தம் பூதி இளங்கோ வதியரையன் போரில் ஏற்பட்ட தோல்வியின் காரணமாக பழையாறையில் வீற்றிருந்ததை அறிய முடிகிறது.

போரில் வெற்றி பெற்ற முதலாம் வரகுண பாண்டியன் திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டையில் உள்ள இறைவனுக்கு இறையிலி வழங்கிய செய்தியானது கல்வெட்டாக பொறிக்கப்பட்டுள்ளது. மேலும், சோழனின் **வெம்பிள் கோட்டை** மதிலை அழித்த பிறகு நியமத்தில் தங்கியிருந்த பொழுது அந்த ஆணையை வழங்கியதாகவும் கல்வெட்டு தெரிவிக்கிறது.



(Published in *Archaeological Survey Report* for 1903-06, pp.

1 [illegible] [।*] [illegible]
2 [illegible]
3 [illegible]
4 [illegible]
5 [illegible] [।*] [illegible]
6 [illegible]
7 [illegible]
8 [illegible] [।*] [illegible]
9 [illegible]
10 [illegible] வெம்பில் மதி[ன்]-
11 [illegible] பொருது நியமத்திருந்தருளி [illegible]-
12 [illegible]
13 [illegible]
14 [illegible] பொன் பாடிக்கல்லால் [illegible]
15 ருபத்தைங்கழஞ்சும் இப்பொன் முதலிற்க
16 பொலிகொண்டு முப்பதின் கழஞ்சு பொன்னின்
17 பொலியால் ஒரு நொந்தா விளக்காக நூற்றிரு-
18 பதின் கழஞ்சு பொன்னும் நாலு நொந்
19 தாவிளக்கெரியக் காண நாழியால் நிசதி அட்டுக
20 டவ நெய் இருநாழி [।*] நின்ற ஐங்கழஞ்சு பொ-
21 ன்னும் [illegible] திருவாதி-
22 ரை நாள் [illegible]
23 விளக்கெரிய அட்டக்கடவ நெய் இரு நாழி உ-
24 ரி[।*] இவ்வொட்டின உரிசு நெய் அட்டி இந்நி-
25 ரு விளக்கெரிப்பான் இப்பொன் நூற்றிருபத்தை
26 ங்கழஞ்சுங் கொண்டோம் சிற்றம்பர் நக[ரத்*]
27 தோம்[।*] இவ்வொட்டின படிசு நெய் அட்டுவிப்[பா*]
28 தற்கு அமைந்து ஒட்டுக்கொண்டோம் சிற்றம்பர் [பா*]
29 திரும் பாதமூலத்தோமும் [।*] இது பன்மாஹே-
30 ஸ்வர ரக்ஷை [।*]

முதலாம் வரகுணன் கல்வெட்டு

சாத்தம் பழியிலி சுமார் பதினெட்டு ஆண்டுகள் பாண்டியனின் நிழலில் ஆட்சி செய்துள்ளான்.


மூன்றாம் நந்தி வர்மனின் ஆட்சி காலத்தின்பொழுது தஞ்சாவூரை தலைமையிடமாகக் கொண்டு சோழநாடு பாண்டிய மேலாதிக்கத்தின் கீழ் இருந்ததை அறிவோம். குவாவன் சாத்தன் முத்தரையரின் மூத்த மகனும் யுவராஜனுமான சாத்தம் பூதி பழையாறையில் அடங்கி கிடந்தான். சோழநாடு மீது ஒன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நடந்த பாண்டிய படை எடுப்பின் பொழுது சோழருக்கு ஆதரவாக அதாவது சாத்தம் பூதிக்கு ஆதரவாக பல்லவர்கள் வந்ததாக எந்த ஆதாரமும் இல்லை.

சுமார் கிபி 830 ம் ஆண்டு நடைபெற்ற பாண்டிய படையெடுப்புக்கு முன்வரை பல்லவனின் மேலாதிக்கத்தின் கீழ் சோழர்கள் இருந்தனர் என்பது குவாவன் சாத்தன் முத்தரையனின் மலையடிப்பட்டி குடைவரை கோயில் கல்வெட்டு மூலம் உறுதியாக தெரிகிறது. எனவே நார்த்தாமலையின் மீது **அதியரையன்** மற்றும் **முத்தரையன்** ஸ்தானத்தில் இருந்த குவாவன் சாத்தனின் இரு புதல்வர்களும் கோயில்கள் எடுப்பித்த காலத்தில், பல்லவனுக்கு கட்டுப்பட்டு இருந்ததை அறிய முடிகிறது.

விடேல் விடுகு

குவாவன் சாத்தன்

முத்தரையன்



சாத்தன் பூதி இளங்கோ வதியரையன்.

சாத்தன் பழியிலி இளங்கோ முத்தரையன்

யுவராஜனான சாத்தம் பூதி என்பவர் கட்டுமான கோயிலான **விஜயாலய சோழீஸ்வரத்தையும்**, முத்தரையனான சாத்தன் பழியிலி என்பவர் **பழியிலீஸ்வரம்** குடைவரைக் கோயிலையும் அருகருகே எடுப்பித்து இருந்ததை அறிவோம்.

அதன் பின் சுமார் 18 ஆண்டுகள் கழித்து பாண்டியன் வரகுணனின் மகனான **சீவல்லபன்** தொண்டை நாட்டின் மீது படை எடுக்கிறான். அதுவரை சோழ நாடானது பாண்டியனின் நிழலில் நடைபெற்றுள்ளது. பல்லவனுடன் மணஉறவில் இருந்த கங்கர்களும் ரட்டகூடர்களும் மூன்றாம் நந்தி வர்மனுக்கு ஆதரவாக பாண்டியனை எதிர்த்தனர்.

தெள்ளாறு என்னும் இடத்தில் நடைபெற்ற போரில் மூன்றாம் நந்திவர்மன் வெற்றி பெற்றதாக **நந்தி கலம்பகம்** தெரிவிக்கிறது. மேலும், பாண்டியனின் படையை மதுரைவரை விரட்டி சென்றதாக கலம்பகத்தில் மூன்றாம் நந்திவர்ம பல்லவன் புகழப்பட்டு உள்ளான். இந்த **தெள்ளாற்றுப் போர்** வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது ஆகும்.

இப்போருக்கு முன்வரை கோஇளங்கோ முத்தரையன் தலைமையில் சுதந்திரமாக சோழநாட்டை ஆள பாண்டியன் துணை புரிந்ததை அறிவோம். அச்சமயத்தில் பாண்டியனின் ராஜதந்திரம் தெளிவாக புலப்படுகிறது. ஒருவேளை பல்லவன் சோழநாட்டின் மீது படையெடுத்து பாண்டியனை விரட்டிய பிறகு சோழநாட்டை பல்லவ ஆதிக்கத்தின் கீழ் கொண்டுவர முயற்சி செய்தால், சோழர்களை பல்லவர்களின் நிரந்தர எதிரியாக உருவாக்கலாம் என்பதாகும். ஏனெனில், சோழர்களை சுதந்திரமாக இறையாண்மையுடன் ஆட்சி செய்ய பாண்டியன் அனுமதித்ததுதான் காரணமாகும்.

தந்திவர்ம பல்லவனும் பின்னர் மூன்றாம் நந்திவர்மனும் அவசரம் காட்டாமல் பொறுமையாக இருந்துள்ளனர். சீவல்லபன் சோழ நாட்டை தாண்டிசென்று தொண்டை நாட்டையும் கைப்பற்ற படையெடுத்து தெள்ளாற்றுப் போரில் பல்லவரிடம் தோற்றதன் காரணமாக தஞ்சையில் ஆட்சி மாற்றம் நடந்துள்ளது.

பல்லவனின் படைகள் சோழநாட்டை கடந்து மதுரைவரை பாண்டிய படையை விரட்டி சென்ற

தருணத்தில் அதுவரை பாண்டியன் நிழலில் ஒருபுறம் பல்லவனை புறக்கணித்துவிட்டு மறுபுறம் மூத்தவனான சாத்தம் பூதியையும் உதறித் தள்ளிவிட்டு மொத்த சோழ நாட்டையும் ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்துவந்த சாத்தம் பழியிலி கோஇளங்கோ முத்தரையன் செய்வதறியாது இருந்த தருணத்தில், மூத்தவனான சாத்தன் பூதி இளங்கோ வதியரையன் எந்த எதிர்ப்புமின்றி இளங்கோ முத்தரையரிடமிருந்து தஞ்சையை கைப்பற்றியுள்ளார்.

முத்தரையன் என்ற ஸ்தானத்தை முழுவதுமாக நீக்கி அதுவரை இளையவனுக்கு ஆட்சி அதிகாரம் கொடுக்கப்பட்டு வந்த ரேநாட்டு அரச வழக்கமுறையை ஒழித்தார்.

தெள்ளாற்றுப் போருக்கு பின்னர் குவாவன் சாத்தன் முத்தரையனின் மகன்களின் ஆட்சி அதிகாரத்தை நீக்கி பல்லவனின் நேரடி ஆட்சியையோ அல்லது சோழஅதிராஜாவான ஒற்றியூர் ஸ்ரீகாந்தனையோ காவிரி நாட்டின் அதிபதியாக தெள்ளாறெரிந்த மூன்றாம் நந்திவர்ம பல்லவன் ஆக்கியிருப்பான் அல்லவா?

இதெல்லாம் நிகழாதவாறு, இளங்கோ முத்தரையரின் ஆட்சி அதிகாரம், ஸ்தானம் ஆகியவற்றை நீக்கி மீண்டும் பல்லவனின் நேரடி மேலாதிக்கத்தின் கீழ் கொண்டுவந்து உள்ளான் ராஜதந்திரியான சாத்தம் பூதி. இதனை விஜயாலயனின் தொடக்க கால ஆட்சி கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

மூன்றாம் நந்திவர்ம பல்லவன் தெள்ளாற்று போரில் முதலாம் வரகுணபாண்டியனை வென்றவுடன் சோழநாட்டில் சாத்தம் பூதி அரியணை ஏறுகிறான். அதியரையன், முத்தரையன் என்ற மூத்தவன் இளையவனுக்கான அதிகாரப்பகிர்வு முறைக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. ***பரகேசரி***, ***ராஜகேசரி*** என்ற தந்தை-மகன் ஆட்சிமுறை ஸ்தாபிக்கப்படுகிறது.

பல்லவனுக்கு முழுவதும் கட்டுப்பட்டு ஆட்சி நடைபெற்றதால் சோழ நாட்டில் விஜயாலயன் ஆட்சிக்காலத்திலும் மூன்றாம் நந்திவர்ம பல்லவனின் பெயர் கொண்டே கல்வெட்டுகள் வெளியிடப்பட்டுள்ளன.

மூன்றாம் நந்திவர்மனின் ஆட்சிக்கு பிறகு பல்லவ நாட்டில் குழப்பம் ஏற்படுகிறது. நிருபதுங்கன் பல்லவ அரசனாக முடிசூட்டப்பட்டான். விஜயாலய சோழன் நிருபதுங்கனுக்கு கட்டுப்பட்டு ஆட்சி புரிந்துள்ளான்.

No. 521.

(*A.R. No.* 300 *of* 1901).

ON A PILLAR IN FRONT OF THE SAME TEMPLE.

1 . . . . . .
2 கொவிசய-
3 நிருபதொ-
4 ங்கவிக்கி-
5 ரமபரும-
6 [ர்*]க்கு யா[ண்*]டு
7 இ[ரு*]பத்திர[ண்*]டா-
8 வது திரு-
9 [க்*]கடைமு[டி]-
10 மஹா-
11 தெவ-
12 [ர்*]க்கு க-
13 ச்சிபெ-
14 ட்டு தி[ண்*]டி-
15 ஸ்ரீ-
16 கு ஆதி[த்*]-
17 தன்-
18 னும்
19 சங்கி-
20 ரதும்
21 உ[ள்]ள-
22 வ[ம்*] திங்க[ள்தொ]-
23 று நா[ள்*] உவாவு[ம்*] தி-
24 ருவாதிரையும்
25 திருக்கெட்டையு[ம்*]
26 இம்மு[ன்று*]-
27 நாளு-
28 ம் பாலு[ம்*]
29 நெ[ய்*]யும்
30 தயிரும்
31 ஆட வெ-
32 த்த பசு
33 பத்து
34 இ[வை]
35 ப[ல்]-
36 மா[யெ]-
37 ஸுர
38 ர[னை*]க்ஷ
39 இவை க[ா]-
40 [ப்*]பான்
41 (ப்) பாத
42 [ஜலே]
43 மௌன [||*]

விஜயாலய சோழன் ஆட்சியில் நிருபதுங்கன் கல்வெட்டு
(சடையார் கோயில் - திருச்சென்னம்பூண்டி)

சோழநாட்டில் மூன்றாம் நந்திவர்மன் மற்றும் நிருபதுங்கன் கல்வெட்டுக்கள் காணப்படும் காலத்தில், விஜயாலய சோழனின் ஆட்சியானது நடைபெற்றுள்ளது.

அபராசித வர்மன் வெளியிட்ட வேலஞ்சேரி செப்பேட்டில் கம்பவர்மன் நிருபதுங்கனிடமிருந்து அரியணையை கைப்பற்றிய தகவல் உள்ளது. கம்பவர்மனும் நிருபதுங்கனும் மூன்றாம் நந்திவர்ம பல்லவனுக்கு பிறந்தவர்கள் ஆவர்.

ஆனால் இருவேறு தாய் என்பதால், அவர்களுக்குள் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றும் போட்டி எழுந்துள்ளது.

மூன்றாம் நந்திவர்மன் நிருபதுங்கனுக்கு முடிசூட்டி உள்ளான். தந்தை இறந்தவுடன் கம்பவர்மன் நிருபதுங்கனிடமிருந்து அரியணையை கைப்பற்றினாலும், குறைந்த அளவு அதிகாரத்துடன் பல்லவ நாட்டின் தென்பகுதியை ஆட்சி செலுத்த அனுமதித்து இருந்ததை கல்வெட்டுகள் எடுத்துரைக்கின்றன. இதனை பல வரலாற்றாசிரியர்கள் உறுதி செய்துள்ளனர்.

விஜயாலயனின் தலைமையில் இருந்த சோழநாடும் நிருபதுங்கனின் மேலாதிக்கத்தின் கீழ் இருந்துள்ளது. விஜயாலய சோழனின் இறுதி காலத்தில் பல்லவநாடு கம்பவர்மனின் மகனான அபராசிதவர்மனின் கீழ் வருகிறது. சோழர்கள் அபராசித வர்மனுக்கு அடிபணிய மறுக்கிறார்கள். விஜயாலய சோழன் கம்பவர்மனை முற்றிலும் வென்றதாக திருவிந்தளூர் செப்பேடு கூறுகிறது. ஆனால், எவ்வாறு வெற்றி பெற்றான் என்ற குறிப்பு எதுவும் இல்லை.

முத்தரையருக்குரிய தஞ்சையை கைப்பற்றியதால் ***தஞ்சை கொண்ட கோப்பரகேசரி*** என்ற அடைமொழியுடன் விஜயாலயன் கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்டுள்ளான்.

நார்த்தாமலையில் உள்ள குடைவரை கோயிலில், நிருபதுங்க வர்மனின் 7 ஆம் ஆட்சியாண்டு கல்வெட்டில் விடேல்விடுகு முத்தரையன் மகன் சாத்தன் பழியிலியின் மகள் பழியிலி-சிறியநங்கை முகமண்டபம் மற்றும் பலிபீடம் அமைத்ததோடு ஆலயத்திற்கு கொடை வழங்கினாள் என்ற விவரமும் உள்ளது.

No. 503.


(*A.R. No.* 283 *of* 1901).

ON THE RIGHT OF THE ENTRANCE INTO THE SAME TEMPLE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ[||*]
2 தெள்ளாற்றெ-
3 றிந்த நந்தி-
4 ப்பொத்தரைய-
5 ர்க்கு யாண்டு
6 ௰அ-ஆவது தி-
7 ருக்கடைமுடி
8 ம(ா)ஹ[ா*]தெவர்க்-
9 கு இரண்டு நொ-
10 ந்தாவிளக்கினு-
11 க்கு குடுத்த பொ-
12 ன் அறுபதின்
13 கழஞ்சு இப்பொ-
14 ன் கொண்டு பலி-
15 சை ஊட்டிரு-
16 ல் நாழ்வாய் நா-
17 ழி நெய் முட்டா-
18 மை அரிசிப்-
19 ப[ா]ர் கையிலெய்
20 குடுத்து திருவி-
21 ளக் கெரிப்போ-
22 மானோம் அன்-
23 றில் ஸபெயொ-
24 ம் இது பந்நாமெஹ-
25 ஸ்வர [ர*]க்ஷை||

விஜயாலயசோழன் ஆட்சியில் தெல்லாறெரிந்த நந்திவர்மன் கல்வெட்டு(சடையார் கோயில் -திருச்சென்னம்பூண்டி)

சோழநாட்டில், மூன்றாம் நந்திவர்மனின் கல்வெட்டானது சாத்தன் பழியிலி கோஇளங்கோ முத்தரையரின் ஆட்சிக்கு பிறகுதான் காணப்படுகிறது.



No. 529.

(*A.R. No.* 303-D *of* 1901).

ON THE SAME PILLAR.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] கொ-
2 விளங்கொமு-
3 த்தரையற்கு
4 யாண்டு ௰௩ ஆ-
5 வது எயினு[ட்*]டு
6 அட்டுப்பள்*ளிநி-
7 யமத்து அறிஞ்சி-
8 கைபுரத்து தெவ-
9 னூர் மகள் நக்க-
10 . . . . . .
11 வைத்த பொ-
12 ன் பங்கிரு கழ-
13 ஞ்சு இப்பொன்
14 பங்கிரு கழஞ்-
15 [சினு]க்கு கொங்-
16 [தா]விளக்கு எரி
17 ப்பதற்கு ப . .
18 . . . . . .

கோ-இளங்கோ முத்தரையர் கல்வெட்டு (சடையார் கோயில் - திருச்சென்னம்பூண்டி)

தெல்லாறெரிந்த நந்திவர்மனின் மகனாகிய நிருபதுங்கனின் ஏழாம் ஆட்சியாண்டு கல்வெட்டு நார்த்தாமலை பழியிலீஸ்வரம் குடைவரை கோயிலில் உள்ளது.

பழியிலிஸ்வரம் **No. 63.**

(A.R. No. 365 *of* **1904).**

NĀRTTĀMALAI, PUDUKKOTTAI STATE.

ON THE NORTH BASE OF THE RUINED MAṆḌAPA IN FRONT OF THE ROCK-CUT ŚIVA TEMPLE.,

This inscription is dated in the **7th year** of **Nṛipatuṅgavikramavarman.** It states that **Sāttam Paḷiyili,** son of Viḍēlviḍugu-Muttaraiyaṉ, excavated the (rock-cut) temple and that his daughter **Paḷiyili Śiṟiya-Naṅgai,** the wife of **Mīṉavaṉ Tamiḷadiyaraiyaṉ** *alias* **Pāllaṉ Aṉantaṉ** enlarged it by adding a *mukha-maṇḍapa*, *bali-pīṭha* etc., and also made provision for worship and offerings to the god therein.

Text.[1]

1 [ஸ்வஸ்தி] ஸ்ரீ [||*] கொவிசைய நிருபதொங்க[விக்ரமவர்ம்மற்]கு யாண்டு ஏழாவது விடெல்விடுகு முத்த-

2 ரையன் மகன் சாத்தம்பழியிலி குடைவித்த ஸ்ரீகொயில் [| *] இச்சிறிகொயிலு-

3 க்கு முகமண்டகமும் இஷவமும் இஷவக்கொட்டிலும் பலிப்பிடமும்

4 செய்வித்தா[ள்] சாத்த(ா)[ம்][பழியிலி ம]கள் மினவன் தமிழதியரைய[ஞ]ன பால்-

5 லன் அனந்தனுக்குப் புக்க பழியிலி சிறியநங்கை [| *]

6 இச்சிறிகொஇலுக்கு ஊஹீ-ீகாமொமரீது[க்கு] அண்ணல்[வா]-

7 [யி]ற் கூற்றத்துப் பெருவிளத்தூர்ச் சவைஞ் சாத்தன் காணியான முவெலியி-

8 ல் வி[லை]கொ[ண்ட] காற்செய்யும் எவ்வகைப்பட்ட இ[றை] இதனுல் வந்ததெ-

9 ல்லாம் கொவினுக்கவிப்பதுளாது சவைஞ், சாத்தனு மிவன் வழியிலாரு[ம்*] பெ[ற]க்-

10 [கட]வதாகவும் இது சடை[ய*]னும்

11 [இ]டையூறெதும் படன்முரை கொவி-

12 [னு]க்கு வரும் இருபத்தைங்க[ழ*]ஞ்சு பொ-

13 ன் தண்டங்கடவ[ரா]கவும் பட்டுடையா-

14 ன் உரூத்திரன் தெயபுக்கிக்குச் செ-

15 ய்வித்தென் பழியி-

16 லி சிறியநங்கைஎன்

17 பழியிலி ஈழுரத்துப் ப-

18 ட்டுடையா னுருத்திரன் தெ-

19 யபு[க்*]குச் செய்வித்[த*]து [|| *]

நார்த்தாமலை குடைவரை கோயில் கல்வெட்டு

விஜயாலய சோழனின் ஆட்சிக்காலத்தில் இந்த குடைவரைக் கோயில் விரிவாக்க பணி நடைபெற்றுள்ளது என்பதை அறியமுடிகிறது. மேலும், விஜயாலயனின் பெயர் முற்றிலும் தவிர்க்கப்பட்டு உள்ளதை காணும்பொழுது பல்லவனை முற்றிலும் திருப்திப்படுத்தும் விஜயாலயனின் ராஜதந்திரமும் தெளிவாக தெரிகிறது.

கோஇளங்கோ முத்தரையர் என்ற ஸ்தானம் இல்லாமல் சாத்தன் பழியிலியின் பெயரானது எழுதப்பட்டு உள்ளதை காணும் தருணத்தில் முத்தரையர் அதிகார பகிர்வு முறையை சாத்தம் பூதி முடிவுக்கு கொண்டு வந்ததையும் அறியமுடிகிறது.

சிலகாலம் கழித்து மீண்டும் பாண்டியன் உதவியுடன் சாத்தம் பழியிலி எழுச்சி பெற்று பல்லவனுக்கு எதிராக செயல்படலாம் என்ற பல்லவனின் சந்தேகத்தை அகற்றும் வகையில் முத்தரையர் ஸ்தானமானது விஜயாலய சோழனால் நீக்கப்பட்டுள்ளது. எனவே சோழநாடு இரண்டு அதிகார பிரிவாக ஆகி மூத்தவன் பல்லவன் பக்கமும் இளையவன் பாண்டியன் பக்கமும் என பிரிவினை ஏற்பட்டு சகோதர யுத்தமாக மாறாமல் தடுத்து, ஒட்டுமொத்த சோழ நாடும் பல்லவனின் மேலாதிக்கத்தின் கீழ் என்ற நிலையை விஜயாலயன் ஏற்படுத்தியுள்ளான். ஒருவேளை சோழன் என்ற ஒற்றை தலைமையின் கீழ் சோழநாடு வலிமை ஆகிவிடுமோ என்ற பல்லவனின் சந்தேகத்தை போக்கும் பொருட்டு, எடுப்பிக்கப்பட்ட கல்வெட்டுகளில் மூன்றாம் நந்திவர்மனின் பெயரையும் பின்னர் அவரின் மகனான நிருபதுங்கனின் பெயரையும் செதுக்க விஜயாலய சோழன் ஆணை பிறப்பித்துள்ளதை அறியமுடிகிறது.

தனது பெயர் வராதவாறு ராஜதந்திரமாக செயல்பட்டதால் விஜயாலய சோழனின் கல்வெட்டுகள் அரிதிலும் அரிதாக கிடைக்கிறது.

சோழநாட்டு அரசன்	மேலாதிக்கம் செய்த மன்னர்கள்
விடேல்விடுகு குவாவன் சாத்தன் முத்தரையன்	விடேல்விடுகு தந்திவர்மன் (பல்லவன்)
சாத்தன் பழியிலி கோஇளங்கோ முத்தரையன்	1,முதலாம் வரகுண பாண்டியன் 2, சீவல்லபன்
விஜயாலய சோழன் (சாத்தம் பூதி இளங்கோ வதியரையன்)	1, தெள்ளாறு எறிந்த மூன்றாம் நந்திவர்மன் 2,நிருபதுங்கன்

மூன்றாம் நந்திவர்மனின் பதினோராம் ஆட்சி ஆண்டில் திருக்கோவிலூர் வீரட்டானேஸ்வரர் ஆலயத்தில் சாத்தம் பூதியின் பெயர் கொண்ட கல்வெட்டு உள்ளது.

No. 924.

(*A.R. No.* 295 *of* 1902).

ON A ROCK IN THE PRAKARA OF THE SAME TEMPLE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ [||*] [கோ]விசைய நந்திவிக்கிரமபரும-
2 ற்கு [யா]ண்டு பதினொன்[றா]வது மலாட்டுக் கு-
3 றுக்கைக்கூற்றத்துத் திருக்கோவலூர்த் தி-
4 ருவிரட்டானத்து மாதேவர்க்கு நந்தாவிள-
5 க் கி[ரவு]ம் பகலு(ம்) மிரண்டு விளக் கெரிப்பத-
6 ற்[கு விடேல்வி]டுகு இ[ளங்கோ]அதிஅரைய ஞயி-
7 . . . . விக்ரமபூதி மகள் விடே-
8 . . . . யின சாத்தன் மறவன் றெவி பூதி
9 . . . . விடேல்விடுகு கல்லா[ல்*] நி-
10 . . . . ன் னிறை நாற்பத்தெண் க-
11 . . . . சை கழஞ்சின்வாய்த் திங்-
12 . . . . ட்டுவதாக திருக்கோவலூர்
13 . . . த்தார் [கை]ய்(ை)வழி [வை*]த்தது[||*]

திருக்கோவிலூர் விரட்டானேஸ்வரர் கோயில் கல்வெட்டு

விடேல்விடுகு விக்கிரம பூதியின் மகள் **பூதி அறிந்திகை** என்று கல்வெட்டு வாசகம் தெரிவிக்கிறது. கல்வெட்டின் ஒரு பகுதி சேதம் அடைந்துள்ளது.

மூன்றாம் நந்திவர்மனின் தந்தையான தந்திவர்ம பல்லவன் 60 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்துள்ளதை அம்மன்னரின் கல்வெட்டுகள் மூலம் அறிய முடிகிறது. தந்திவர்மன் காஞ்சியில் வீற்றிருந்த தருணத்தில் முதலாம் வரகுண பாண்டியன் சோழ நாட்டை தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளான்.

தந்திவர்மன் ஆட்சியில் இருக்கும்போதே மூன்றாம் நந்திவர்மன் தந்தையுடன் இணைந்து ஆட்சி பொறுப்பை காஞ்சியிலிருந்து கவனித்து வந்திருக்கலாம்.

திருக்கோவிலூர் வீரட்டானேஸ்வரர் ஆலயத்தில் காணப்படும் கல்வெட்டு விஜயாலய சோழனின் தொடக்க கால ஆட்சி கல்வெட்டாக இருக்கலாம்.

குவாவன் சாத்தன் முத்தரையனை போல அவருடைய மூத்த மகன் சாத்தம் பூதியும் ***விடேல்விடுகு*** என்ற பட்டத்தை தரித்து பல்லவனுக்கு கட்டுப்பட்டவன் என்பதை வெளிப்படுத்தி உள்ளான். இதன்மூலம் விஜயாலய சோழனுக்கு விடேல்விடுகு என்ற பட்டம் இருந்து உள்ளதோடு தனது மகளை வேளிர் மன்னன் சாத்தன் மறவனுக்கு மனம் முடித்து கொடுத்து உள்ளான் என்பதை அறிகிறோம்.

சாத்தன் மறவன் பூதி என்பவர் சாத்தன் பூதிக்கு கட்டுப்பட்ட சிற்றரசன் ஆவார். மேலும் சாத்தன் பூதியின் மகளான பூதி அறிந்திகையை மணந்தவர் ஆவார். திருக்கோவிலூர் கல்வெட்டில் விடேல்விடுகு **விக்கிரமபூதி இளங்கோ வதியரையன்** என்று விஜயாலயன் குறிப்பிடப்படுகிறார்.

வேளிர் சிற்றரசன் சாத்தன் மறவன் பூதியும் பல கல்வெட்டு களில் விஜயாலயனின் இயற்பெயரான விக்கிரமபூதி என்ற பெயராலேயே அழைக்கப்படுகிறான்.

பூதி அறிந்திகை திருவொற்றியூர் மகாதேவனுக்கு சங்கிராந்தி தோறும் அரிசி, மா, வாழைப்பழம், சர்க்கரை, வெற்றிலை, பாக்கு முதலியன கிடைப்பதற்காக 27 கழஞ்சு பொன் அளித்துள்ளார். இதற்கான கல்வெட்டில் விடேல்விடுகு இளங்கோவதி யரையனின் மகள் என்றும் கொடும்பாளூர் தேவி பூதி அறிந்திகை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 852 ம் ஆண்டு திருக்கோவிலூருக்கு தெற்கே **வீரசோழபுரம்** என்னும் ஊரில் காணப்படும் நடுகல்லில் தஞ்சை கொண்ட கோப்பரகேசரி என்ற வாசகத்துடன் நடுகல் ஒன்று காணப்படுகிறது. பல்லவ பேரரசரின் பெயர் குறிப்பிடாமல் தஞ்சை கொண்ட கோப்பரகேசரி என்ற விஜயாலய சோழனின் பட்டம் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது. விஜயாலயன் தஞ்சையைத் கைப்பற்றிய பின் சோழ நாட்டின் எல்லை தென்பெண்ணை ஆறு வரை இருந்துள்ளது என்பதை இந்த நடுகல் மூலம் அறிகிறோம். அந்த நடுகல்லில் கற்பூண்டி நாட்டு அத்தியூர் கரம்பை என்னுமிடத்தில் நடந்த நிகழ்வை எழுதியுள்ளனர். தஞ்சை கொண்ட கோப்பரகேசரியின் நான்காம் ஆட்சியாண்டில் அந்நிகழ்வு நடைபெற்றது எனவும் நடுகல்லில் தெரிவித்துள்ளனர்.

திருச்சென்னம்பூண்டி முத்தரையர் ஆட்சியில் முக்கியத்துவம் பெற்றிருந்த நியமத்துக்கு வடமேற்கில் மூன்று கிலோமீட்டர் தொலைவில் கொள்ளிடம் ஆற்றின் தென்கரையில் அமைந்துள்ள ஊர் ஆகும். அங்குள்ள சடையார் கோவிலில் பல்வேறு மன்னர்கள் காலத்து கல்வெட்டுக்கள் காணப்படுகிறது. அவற்றில் தொன்மையானது கோஇளங்கோ முத்தரையரின் பதிமூன்றாம் ஆட்சியாண்டு கல்வெட்டு ஆகும். இம்மன்னர் சுமார் 18 ஆண்டுகள் தன்னிச்சையாக பல்லவருக்கு கட்டுப்படாமல் ஆட்சி செய்தார் என்பதை முன்னரே கண்டோம். இளங்கோ முத்தரையரின்

ஆட்சிக்காலத்தில் முதலாம் வரகுண பாண்டியனின் கல்வெட்டுகளும் நேமம், திருக்கோடிக்காவல் உட்பட சோழநாடு முழுவதும் காணப்படுகிறது. இளங்கோ முத்தரையரின் தந்தையான குவாவன் சாத்தன் முத்தரையன் ஆட்சியில் தந்திவர்ம பல்லவனின் பெயர் பொறித்த கல்வெட்டுகள் சோழ நாட்டின் தென்பகுதி வரை காணப்படுகிறது. எனவே, பாண்டியன் சோழநாட்டை வெற்றி கொண்டபின் சுமார் 18 ஆண்டுகளுக்கு பல்லவனின் கல்வெட்டு சோழநாட்டில் கிடைக்கப்பெறவில்லை. சடையார் கோயிலில் தெள்ளாறெறிந்த நந்திவர்மன் கல்வெட்டு உள்ளது. அச்சமயத்தில் தஞ்சையை விஜயாலயன் கைப்பற்றி இருந்தாலும் சோழ மன்னரின் பெயர் கல்வெட்டில் இடம் பெறவில்லை. மேலும், மூன்றாம் நந்திவர்மனின் மகாதேவியார் அடிகள் கண்டன் மாறன் பாவையார் 17 கழஞ்சு பொன் வழங்கிய செய்தியை தாங்கிய கல்வெட்டும் சடையார் கோயிலில் உள்ளது. மேலும், அம்மகாதேவியார் ஆறு கழஞ்சு பொன் வழங்கிய மற்றொரு கல்வெட்டும் சடையார் கோயிலில் உள்ளது. மூன்றாம் நந்திவர்ம பல்லவனின் மகனான நிருபதுங்கனின் 18 ம் மற்றும் 22 ம் ஆட்சியாண்டுக் கல்வெட்டுகள் அதே கோயிலில் காணப்பட்ட போதிலும் இளங்கோ முத்தரையருக்கு பின்னர் தஞ்சையை தலைமையிடமாக கொண்டு ஆட்சி செய்த விஜயாலயனின் பெயர் கொண்ட கல்வெட்டுக்கள் எதுவும் கிடையாது.

சோழ சாம்ராஜ்யத்திற்கு வித்திட்ட சமயத்தில் விஜயாலயன் பல்லவனுக்கு முழுவதும் கட்டுப்பட்டு இருந்துள்ளான் என்பதை சடையார் (கடைமுடிநாதர்) கோயில் கல்வெட்டுக்கள் எடுத்துரைக்கின்றது. அதே சமயத்தில், வடக்கே தென்பெண்ணை ஆறுவரை விஜயாலயனின் சோழநாடு பரவியிருந்தது என்பதை வீரசோழபுரம் நடுகல் மூலம் அறிகிறோம்.

4

அரிய தகவல்கள்

சிற்பள்ளி:-

புண்ணிய குமார முத்துராஜா வெளியிட்ட செப்பேட்டில் சிற்பள்ளி என்னும் தலைநகரத்திலிருந்து நந்திவர்ம சோழனின் மூன்றாவது மகன் மற்றும் அவரின் சந்ததியினர் ரேநாட்டை ஆட்சி செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. புண்ணிய குமாரனின் மூத்த சகோதரனும் மகேந்திர விக்கிரம சோழ மகாராஜாவின் மகனுமான குணமுதிதன் காலத்தில் காவிரி நாட்டில் முத்தரையர் ஸ்தான ஆட்சிமுறையானது தொடங்குகிறது. ரேநாட்டில் உள்ளதுபோல் காவிரி நாட்டிலும் மன்னரின் இளைய மகனுக்கு முத்தரையர் என்ற ஸ்தானமானது உருவாக்கப்பட்டுள்ளது. குவாவன் மாறன் முத்தரையன் என்பவர் காவிரி நாட்டில் கிடைக்கும் ஆவணங்களில் முதலாவதாக முத்தரையன் ஸ்தானத்தில் ஆட்சி செய்தவர் என்பதை அறியமுடிகிறது. அதே தருணத்தில் நாட்டின் தலைநகரான சிற்பள்ளி என்ற பெயர்

உறையூருக்கு (அல்லது உறையூருக்கு அருகில் இருந்த இடத்துக்கு) சூட்டப்பட்டுள்ளது. பின்னாளில் அதுவே சற்று மருவி **சிராப்பள்ளி** என்று ஆகியுள்ளது. பாடல் பெற்ற ஸ்தலங்கள் அமையப் பெற்ற ஊர்கள் “திரு” என்ற அடைமொழியுடன் அழைக்கப்படும். எனவே ரேநாட்டின் சிற்பள்ளியானது காவிரி நாட்டில் சூட்டப்பட்டு பின்னர் திருசிற்பள்ளி என்று அழைக்கப்பட்டு, இறுதியில் திருச்சிராப்பள்ளி என்று மருவியுள்ளது.

தமிழ்முத்தரையர்கோவை:-

சுமார் பத்தாம் நூற்றாண்டை சார்ந்த யாப்பருங்கலவிருத்தி என்னும் நூலில் தமிழ் முத்தரையர்கோவை என்ற பாடல் தொகுப்பை பற்றிய குறிப்பு உள்ளது. வரலாற்றாசிரியர்கள் அதனை பற்றி நன்கு ஆய்வு செய்யாமல் அந்நூல் மறைந்து விட்டதாக கூறினர். பாண்டிக்கோவை என்ற பாடல் தொகுப்பானது கி.பி. ஏழாம் நூற்றாண்டில் நின்றசீர் நெடுமாறன் போரில் பெற்ற வெற்றிகளை புகழ்ந்து புலவர்களால் பாடப்பட்டதாகும். அந்த மன்னர் கூன்பாண்டியன் என்றும் சடையன் மாறன் என்றும் வழங்கப்பட்டு உள்ளார். சோழநாட்டை அம்மன்னர் ஒரே நாளில் கைப்பற்றியதாக பாண்டிக்கோவை புகழ்கிறது. அவர் பெற்ற போர்க்கள வெற்றிகளை பாராட்டி 300க்கும் மேற்பட்ட பாடல்கள் பாடப்பட்டுள்ளன. பாண்டிக்கோவை இயற்றப்பட்டு ஏறத்தாழ 75 ஆண்டுகளுக்கு பிறகு தமிழ் முத்தரையர் கோவை இயற்றப்பட்டுள்ளது.

அதன் பெயரைக் கொண்டே பாடல்கள் ஒரு முத்தரையரின் வீரத்தை புகழ்ந்து பாடப்பட்டவை என்பதை அறியலாம். இதுவரை கிடைத்துள்ள ஆவணங்களின்படி குவாவன் மாறன், சுவரன் மாறன், குவாவன் சாத்தன் மற்றும் சாத்தன் பழியிலி என நான்கு மன்னர்கள் முத்தரையர் ஸ்தானத்தில் ஆட்சி செய்துள்ளனர்.

இவர்களில்

1,குவாவன் மாறன் முத்தரையன் காலத்தில் நின்றசீர் நெடுமாறனிடம் தோற்று அதன்பின் மங்கையர்க்கரசியாரை மணமுடித்து கொடுத்து நல்லுறவில் இருந்த காலம் ஆகும். மேலும், பாண்டியனின் எல்லை கொங்கு மண்டலம்வரை பரவியிருந்தது. குவாவன் மாறன் முத்தரையர் ஆட்சியின் பொழுது தெற்கே பாண்டியர்களும் வடக்கே பல்லவர்களும் நட்புறவில் இருந்த காலம் ஆகும். எனவே அம்மன்னரின் வீரத்தை புகழ்ந்துபாடி புலவர்கள் கோவை இயற்றியிருக்க மாட்டார்கள்.

2,குவாவன் சாத்தன் முத்தரையன் தந்திவர்ம பல்லவனுக்கு கட்டுப்பட்டு இருந்தவர் ஆவார். இம்மன்னனின் கல்வெட்டுகள் மலையடிப்பட்டியில் கிடைத்தாலும் போரில் எவரையும் வென்றதாக எந்த ஆதாரமும் இல்லை. மேலும், குவாவன் சாத்தன் முத்தரையரின் இறுதி காலத்தில் முதலாம் வரகுண பாண்டியனிடம் சோழர் படை தோல்வியுற்றது.

3,சாத்தன் பழியிலி கோ இளங்கோ முத்தரையர் தன்னிச்சையாக ஆட்சி செய்து இருந்தாலும் முதலாம்

வரகுண பாண்டியனிடம் கட்டுப்பட்டு இணக்கமாக இருந்தவர் என்பதை அவருடைய ஆட்சிகால கல்வெட்டுகள் மூலம் அறியலாம்.

4,எனவே, குவாவன் மாறனின் பேரனும் மாறன் பரமேஸ்வரனின் மகனுமான சுவரன்மாறன் முத்தரையரின் வீரதீர போர்க்கள வெற்றிகளை புகழ்ந்து பாடப்பட்ட பாடல்களின் தொகுப்பே தமிழ் முத்தரையர் கோவை என்பது உறுதியாகிறது. சுவரன்மாறன் முத்தரையன் போரில் பாண்டியன், சேரன் மற்றும் இருக்குவேளிர்களை வென்றுள்ளார். அப்போர்கள வெற்றிகள் **பாச்சில்வேல் நம்பி**, **ஆச்சாரியார் அநிருத்தர்**, **கோட்டாற்று இளம் பெருமானார்** மற்றும் **குவாவன் காஞ்சன்** போன்ற புலவர்களால் பாடப்பட்டுள்ளன. பேரரசர் சுவரன் மாறன் முத்தரையர் தனது ஆட்சியின் இறுதிக் காலத்தில் நியமத்தில் **மாகாளத்து பிடாரிக்கு கோயில்** எடுப்பித்து உள்ளார். அக்கோயிலின் கல்தூண்களில் சுவரன் மாறன் முத்தரையர் எறிந்த ஊர்களும் மன்னரின் பெயர்களும் அவனை பாடினோர் பெயர்களும் எழுதப்பட்டுள்ளன.

கொடும்பளூர், மணலூர், திங்களூர், அந்தியூர், காரையூர், வெண்கோடல், காந்தளூர், கண்ணனூர், அன்னவாயில், செம்பொன்மாரி மற்றும் மறங்கூர் ஆகிய இடங்களில் பலம் பொருந்திய எதிரிகளை வென்றுள்ளான். இப்போர்களில் பெற்ற வெற்றிகள் பாடல்களாக இயற்றப்பட்டுள்ளன. அவற்றில் சிறந்த பாடல்களை தேர்ந்தெடுத்து ஆலய தூண்களில் எழுதியுள்ளான்.

இப்பாடல்கள் காலா பிடாரி கோயிலில் எழுதுவதற்காக பாடப்பட்ட பாடல்கள் அல்ல. அவ்வாறு இருந்திருந்தால் பிடாரி பற்றிய பாடல் வரிகள் இருந்திருக்கும் அல்லவா?. ஒவ்வொரு போர்கள வெற்றிக்கும் ஒன்றிரண்டு பாடல்கள்தான் கல்தூணில் எழுதப்பட்டுள்ளன. ஆனால், பாண்டிக்கோவையில் ஒவ்வொரு போர்க்கள வெற்றிக்கும் பத்துக்கும் மேற்பட்ட பாடல்கள் உள்ளன. சில போர்க்கள வெற்றிகளை புகழ்ந்து பதினேழு பாடல்கள் வரை பாண்டிக்கோவையில் இயற்றப்பட்டுள்ளன. பேரரசர் சுவரன் மாறனை புகழ்ந்து நான்கு பெரும் புலவர்கள் பாடியுள்ளனர். அவர்கள் பாடிய பாடல்களில் சிறந்த பாடல்களை தேர்வு செய்து கல்தூணில் பொறித்துள்ளனர் என்பதை உணரமுடிகிறது.

மேலும், இரண்டாம் பெரும்பிடுகு முத்தரையன் பெற்ற அனைத்து வெற்றிகளையும் புகழ்ந்து நான்கு புலவர்கள் பாடிய பாடல் தொகுப்பே தமிழ் முத்தரையர் கோவை என்பது தெளிவாகிறது.

தமிழ் முத்தரையர் கோவை இயற்றப்பட்டதற்கு உந்து சக்தியாக பாண்டிக்கோவை இருந்திருக்கலாம். ஏனெனில், "*பொன்னி நாடன் பகை போல் மெலிகின்றது*" என பாண்டிக்கோவையில் உவமை கூறும் அளவுக்கு மங்கையர்க்கரசியினால் சோழர் பாண்டியர் இடையே நல்லுறவு இருந்துள்ளது. மேலும், பாண்டிக்கோவை பாடல்கள் செப்பு பட்டயத்தில் ஆவணமாக கிடைத்துள்ளதால் தமிழ்முத்தரையர் கோவையும் செப்பேடு வடிவில் முழுமையாக எதிர்காலத்தில் கிடைக்கலாம்.

தஞ்சாவூர் - தனஞ்செயவூர்:-

பல்லவ மன்னன் சிம்ம விஷ்ணுவின் (கி.பி. 575 - 600) படையெடுப்புக்கு பின்னர் சோழநாடு பல்லவர்களுக்கு கட்டுப்பட்ட அரசாக இருந்துள்ளது. திருச்சிராப்பள்ளி மலைக் கோயில் கல்வெட்டில் “தஞ்சை ஹரக” என்று உள்ளது. இதன் அர்த்தமானது, தஞ்சாவூர் வெற்றி கொள்ளப்பட்டது என்பதாகும். “தஞ்சை தளிக்குளத்தார்” என்று அறுபத்தி மூன்று நாயன்மார்களில் ஒருவரான திருநாவுக்கரசர் குறிப்பிட்டுள்ளார். திருவீழிமிழலை பதிகத்தில் தஞ்சை பற்றிய பாடல் உள்ளது. தஞ்சாவூர் முன்பு அளகாபுரி என்னும் பெயரால் வழங்கப்பெற்றது என்றும் தஞ்சன் என்னும் அசுரன் இப்பகுதியை ஆண்டதால் தஞ்சாவூர் எனப் பெயர் பெற்றது என்ற கருத்தை ஏற்றுக் கொள்ள இயலாது. ஏனெனில், தஞ்சாவூர் கி.பி. ஆறாம் நூற்றாண்டுக்கு பிறகு உருவான புதிய நகரம் ஆகும். தஞ்சாவூருக்கு மிகஅருகில் ஏழு மைல் தொலைவில் வல்லம் என்னும் தொன்மையான நகரம் இருந்துள்ளது. அவ்வாறு இருக்க தஞ்சாவூரின் கதையானது சிறுவர்களுக்கு சொல்லப்பட்ட கற்பனை கதை என்பது தெளிவாகிறது. எனவே தஞ்சாவூரின் உண்மையான பெயரானது தனஞ்ஜெயன் பெயரால் அமைந்தது என்பதே சரியான ஆய்வு முடிவாகும்.

களப்பிரர்களுக்கு பிறகு நந்திவர்ம சோழனின் மூத்த மகனான சிம்மவிஷ்ணு சோழன் ஆட்சி தொடங்கி அவருடைய மகன் நல்லடிகோன் வரை சோழ நாட்டை ஆட்சி செய்துள்ளனர். அதன் பின்னர் பல்லவ சிம்ம

விஷ்ணு ரேநாட்டு சோழர்களுடன் இணைந்து சோழநாட்டை வெற்றி கொண்டுள்ளார். இதன்மூலம் கோச்செங்கணான்(சிம்மவிஷ்ணு சோழன்) மற்றும் அவருடைய மகன் நல்லடி ஆகிய இருவரும் பல்லவருக்கு கட்டுப்பட்டு ஆட்சி புரியவில்லை என்பது தெளிவாகிறது. மேலும், இப்போருக்கு பின்னர் தனஞ்சய முத்துராஜாவின் வாரிசான ***சேர சோழ பாண்டிய அதிபதி*** **மகேந்திர விக்கிரம சோழ மகாராஜா** தனது தந்தை பெயரில் புதிய நகரத்தை ஸ்தாபித்து அதனை முத்தரைய தலைநகரமாக ஆக்கியிருக்க வேண்டும். முதலாம் குவாவன் சோழநாட்டின் அதிபதியாக இருந்திருந்தாலும், குவாவன் மாறன் முத்தரையர் முதலில் தஞ்சையில் இருந்து ஆட்சி செய்து இருக்க வேண்டும்.

தனஞ்சயனின் பெயரில் தஞ்சாவூர் என்ற புதிய நகரம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதுதான் அனைவராலும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையில் உள்ளது.

திரைராஜ்ய:-

புண்ணிய குமார முத்துராஜா வெளியிட்ட மாலேபாடு செப்புபட்டயத்தில் "திரைராஜ்யர்" என மன்னரின் வம்சத்தை பற்றி தெரிவிக்கிறது. திரை என்றால் அலை என பொருள்படும். அலை பொதுவாக கடற்கரை ஒட்டி காணப்படும்.

கரிகால் சோழனின் சந்ததி என்றும் சூரிய வம்சம் என்றும் குறிப்பிட்டு திரைராஜ்யர் என தெரிவித்துள்ளனர். இதன்மூலம் சோழர்கள் கடல் அலையை ஆதிக்கம் செலுத்துபவர்கள் என்பது புலப்படுகிறது. மேலும்

சோழர்களின் பட்டங்களைக் உற்றுநோக்கினால் ***சோழன்-சோழிய-சோழி***, ***முத்துராஜா-முத்து***, ***கிள்ளி - கிள்ளிஞ்சல்*** என கடற்கரையை ஒட்டி கிடைக்கும் பொருள்களின் பெயராகவே உள்ளது. காவிரிபூம்பட்டினம் என்ற கடற்கரை நகரம் முற்கால சோழர்களின் தலைநகரமாக இருந்துள்ளது என்பதை அறிவோம். அந்த நகரம் கொள்ளிடம் ஆற்றின் முகத்துவாரத்தின் தென்பகுதியில் உள்ளது. கழிமுகத்தின் வடபகுதியில் சோழர்களின் குலதெய்வமான நடராஜர் கோயில் சிதம்பரத்தில் அமைந்துள்ளது.

எனவே சோழர்களின் தோற்றம் கடற்கரையை ஒட்டியே முற்காலத்தில் இருந்துள்ளதை அறியமுடிகிறது. அதன் காரணமாகவே மாலேபாடு செப்பேட்டில் புண்ணிய குமார முத்துராஜா தனது வம்சத்தைப் பற்றி தெரிவிக்கும் பொழுது அலையை ஆதிக்கம் செலுத்துபவர்கள் என்று தெரிவித்துள்ளார்.

> *“நளியிரு முன்னீர் நாவாய் ஓட்டி வளி தொழில் ஆண்ட உறவோன் மறுக! கள இயல் யானைக் கரிகால் வளவ!”*
>
> *புறநானூறு பாடல் -66*

இப்பாடலில் கரிகால் வளவன் காற்றின் திசை அறிந்து ஓடங்களை செலுத்தும் மரபில் தோன்றியவன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்துராஜா:-

முத்துராஜா என்ற ஸ்தானமானது சோழ இளவரசனுக்கு உரியது ஆகும். ரேநாடு மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் இன்றளவும் முத்துராஜா என்ற பெயரில் சுமார் 12 லட்சம் மக்கள் வாழ்ந்து வருகிறார்கள்.

1938ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட நெல்லூர் கெசட்டில் அம்மாவட்டத்தின் மீனவர்களை பற்றிய தகவல் உள்ளது. பட்டணவர்(பட்டப்பு), பள்ளி, போயர், முத்துராஜா மற்றும் பேஸ்தா போன்ற மக்கள் மீனவர் என நெல்லூர் மாவட்ட சாசனம் தெரிவிக்கிறது.

நீண்ட நெடிய கடற்கரையும் வடபெண்ணை ஆற்றின் கிளை நதிகளும் நெல்லூர் மாவட்டத்தில் வாழும் மீனவ மக்களுக்கு ஏற்ற புகலிடமாக உள்ளது. அவர்களின் பட்டப்பு அல்லது பட்டணவர் என்று அழைக்கப்படுபவர்கள் தமிழ் பேசுபவர்கள் ஆவர். மேலும், ஆழ்கடலில் பட்டணவர் மீன் பிடிக்கின்றனர். பள்ளி, கப்பு மற்றும் கரையர் சமுதாய மீனவர்கள் கடல் மற்றும் நன்னீர் நிலைகளில் மீன்பிடி தொழிலை செய்வதாக நெல்லூர் சாசனம் தெரிவிக்கிறது. முத்துராஜா மற்றும் பேஸ்தா மக்கள் பெரும்பாலும் நன்நீர் நிலைகளான ஆறு, ஏரி மற்றும் குளங்களில் மீன்பிடி தொழிலை செய்து வந்ததாக சாசனம் கூறுகிறது. பள்ளி, பேஸ்தா மற்றும் முத்துராஜா மக்கள் தெலுங்கு மொழி பேசுபவர்கள் ஆவர். முத்துராஜா மக்கள் ஒரு காலத்தில் வேட்டைக்காரர்களாகவும் மீனவர்களாகவும் இருந்திருந்தாலும் தற்பொழுது பெரும்பாலும் விவசாயத்தை முதன்மைத் தொழிலாகக் கொண்டு


வாழ்ந்து வருவதாக சமீபத்திய ஆவணங்கள் தெரிவிக்கின்றன.

* * *


Malepadu plates of Punyakumara, the fifth year




புண்ணிய குமார சோழ மகாராஜா வெளியிட்ட
மலேபாடு செப்பபட்டயம்



தனஞ்சய முத்தரையரின் மரபு பட்டியல்



சுந்தரநந்தா மரபு பட்டியல்




(From Photographs)

SCALE: ONE-EIGHTH

B. CH. CHHABRA.
REG. No. 3977 E'36–485'49.

எரிகள் - முத்துராஜா தனஞ்செய வர்மன் கல்வெட்டு



2 2
4 4
6 6
8 8

சோழ மகாராஜாவின்
உருத்துரு கல்வெட்டு

D



F



சோழ மகாராஜாவின்
இந்துகுரு கல்வெட்டு

புண்ணிய குமாரனின்
திப்பலூர் கல்வெட்டு

G. First piece



G. Second piece



SCALE : ONE-SEVENTH

புண்ணிய குமார சோழ மகாராஜாவின்
ராமேஸ்வரம் தூண் கல்வெட்டு

Malepadu stone inscription of Satyaditya

First Face




Second Face



எரிகல் - முத்துராஜா
சத்யாதித்தியா
கல்வெட்டு

J



உத்தமாதித்திய சோழ மகாராஜா கல்வெட்டு


K



(Side I) (Side III)

விஜயாதித்த சோழனின் சாமலூர் கல்வெட்டு

L



நல்லசெருவுபள்ளி கல்வெட்டு

The long line of sea-board in the district affords a natural employment to a large fishing population. Most of those who engage in sea-fishing belong to the fishing castes, while others are either Muhammadans or aborigines. The Pattnavars or Pattapus are Tamil, and the Palli, Kapu and Karayar are Telugus who are sea and backwater-fishermen; the freshwater-fishermen are the Besthas and Muthachas who are all Telugus. The Bois or Boyas, who are a Telugu tribe, besides being the best "bearers" and domestic servants, also resort to fishing in their spare time. When they cannot get into domestice service, they prefer to earn a living by catching fish. The fishing tribes in the district numbered at the Census of 1921 as shown in the margin and they were about 4 per cent of the entire population of the district. There is a theory that all the fishing castes are non-Aryan and that, from the nature of their primitive occupation they nearly all belong to an aboriginal stock. Pattapu is the name of the Tamil Pattnavars who have migrated to the Telugu country. They are a sea-faring people and are

	Male.	Female.	Total.
Pattapu ..	5,366	5,319	10,685
Palli ..	2,190	2,021	4,211
Besthas ..	1,219	1,205	2,424
Boyas ..	4,085	4,023	8,108
Muthrachas ..	13,039	12,403	25,442
Total ..	25,899	24,971	50,870

1921 சென்சஸ் மீனவர் எண்ணிக்கை (நெல்லூர் மாவட்டம்)

In the Nellore Manual, the Mutrāchas are summed up as being hunters, fishermen, bearers, palanquin-bearers, and hereditary watchmen in the villages. At times of census, Mutrācha or Mutarāsan has been recorded as a sub-division of Ūrāli, and a title of Ambalakkāran. Muttiriyan, which is simply a Tamil form of Mutrācha, appears as a title and sub-division of Ambalakkāran (*q.v.*). Further, Tolagari is recorded as a sub-division of Mutrācha. The Tolagaris are stated * to be a small cultivating caste, who were formerly hunters, like the Pālayakkārans. Most of the Mutrāchas are engaged in agriculture. At Pāniyam, in the Kurnool district, I

முத்துராஜாக்கள் மீனவர் மற்றும் வேட்டைக்காரர்கள்
(நெல்லூர் மாவட்ட சாசனம்)

* * *

துணை நூல்கள்:

1. அகநானூறு
2. புறநானூறு
3. வேலஞ்சேரி செப்பேடு - இரா.நாகசாமி
4. புதுக்கோட்டை மாவட்ட சமுதாய ஆவணங்கள் - இரா.திருமலை நம்பி
5. அன்பில் செப்பேடுகள் - கோபிநாத் ராவ்
6. ஸ்ரீகாந்த சோழனின் மெட்ராஸ் மியூசியம் செப்பேடுகள்-தொல்லியல் துறை
7. A.R.E அறிக்கைகள்
8. தென்னிந்திய கல்வெட்டுகள்
9. எபிகிராஃபிக் இன்டிகா
10. பாண்டிக்கோவை - வே.துரைசாமி
11. முத்தரையர் சோழர் வரலாறு - சி.சுந்தரராஜன் சேர்வை
12. நாலடியார்
13. திருவிளையாடல் புராண பாடல்கள்

-முற்றும்.

* * *